19 வது வருடத்தில்

விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059

E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com

416-282-4978





**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm
மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338
416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு

WALK IN DENTAL CLINIC

Dr. Iru Vijayanathan

குடும்ப பல்வைத்தியர்

416-264-3232

3150 Eglinton Ave. E.
Markham & Eglinton
சந்திப்புக்கு அருகாமையில்



நதி 19 பாலம் 06 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் MARCH 15, 2009


# இலங்கை அரசுக்கு ஐ.நா. போர்க்கால குற்றச்சாட்டு

துயரமும், ஏக்கமும், தூசியும் நிறைந்த முகங்கள், நிம்மதி அற்றுப்போன வாழ்கை, கண்களில் என்னவென்று புரிந்து கொள்ளமுடியாத பயமும், திகிலும். இது மட்டுமா?

தங்கள் சொந்த நிலத்தில் அமைதியாக தமது மரணத்திற்காக வீதிகளிலும், குடில்களிலும், பதுங்கு குழிகளிலும் காத்திருக்கின்றார்கள் இவர்கள். யார் இவர்கள்?

இவர்கள் தான் நமது உடன் பிறப்புக்கள். வன்னி மண்ணின் மைந்தர்கள். தமிழர்கள்.

வன்னி மண்ணின் அவலம் இது.

கூட்டம் கூட்டமாக மக்கள். அத்தோடு லொறிகள், மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள், டிரக்டர்கள் என்று குவிந்து போய்கிடக்கின்ற வாகனங்கள். அது மட்டுமல்ல மாடுகளும், நாய்களும் இந்த சிறிய இடத்தில் பெரும் ஆக்கிரமிப்பு செய்து வீதிகளில் திரிகின்றன. வாய் இல்லா ஜீவன்கள். ஏதாவது சாப்பாடு கிடைக்குமா என்று ஏங்கி மனிதர்கள் உள்ள இடமாக அலைகின்றன.

கொடிய வெய்யிலும், கொட்டும் மழையும் அமைந்து போன வாழ்வு. ஒரு குடம் தண்ணீருக்காக காத்திருக்கும் மக்கள் கூட்டம். இலங்கைக்கே அரிசி அனுப்பிய வன்னி மக்கள் கூட்டம் இப்போ, ஒரு வேளை ஒரு கை அளவு அரிசி கிடைக்குமா என்று ஏங்கித் தவிக்கின்ற நிலைமை. இந்த இடிபாட்டுக்கு இடையில் தான் 'செல்' விழுந்தவர்களை காவிச்செல்ல வேண்டிய நிலைமை.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பான ஆணைக் குழுவுக்கு இலங்கையின் வடக்கில் தமிழ் மக்கள் எதிர்நோக்கி வரும் பேரவலம் தொடர்பில் தினந்தோறும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மின்னஞ்சல் முறைப்பாடுகள் கிடைக்கின்றன என்று ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான ஆர்வலர்களையும் ஊடகவியலாளர்களையும் கொண்ட ஒரு குழுவினர் தற்போது ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவின் பத்தாவது மாநாட்டில்



பார்வையாளர்களாகக் கலந்து கொண்டுள்ளனர். குறித்த குழுவினர் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையைச் சந்தித்தபோது இந்தத் தகவலை தம்மிடம் வெளியிட்டதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பான ஆணைக் குழுவில் முக்கியமாகப்பேசப்படும் ஒரு நாடாக இப்போது இலங்கை விளங்குவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.
இதேவேளை, குறித்த குழுவினர் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையைச் சந்தித்து இலங்கை நிலைவரம் தொடர்பாக எடுத்துக் கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் ஊடகவியலாளர்களின் இன்றைய நிலை தொடர்பாக நவநீதம்பிள்ளை தம்மிடம் கவலையை வெளியிட்டதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேசமயம் இலங்கையில் அப்பாவி தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டு வருவதற்கு சிறிலங்கா அரசாங்கத்துக்கு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் கலாநிதி நவநீதம்பிள்ளை கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக சுவிற்சர்லாந்து ஜெனீவாவில் இருந்து நேற்று வெள்ளிக்கிழமை கலாநிதி நவநீதம்பிள்ளை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில் பாதுகாப்பு வலய பகுதிகளுக்குள் சிறிலங்கா இராணுவம் தொடர்ந்து குண்டுகளை வீசி வருகின்றது. பொதுமக்கள் தங்கியுள்ள இதர இடங்கள் மீதும் குண்டுகளை வீசி வருகின்றது.

அப்பாவி தமிழர்களை விடுதலைப் புலிகள் மனிதக் கேடயங்களாக பிடித்து வைத்திருப்பதாக வும், தப்பிச்செல்ல முயற்சிப்பவர்களை சுட்டுக்கொல்வதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும், அவர்கள் சிறுவர்களை பலாத்காரமாக இயக்கத்தில் சேர்ப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இத்தகைய செயல்கள், அனைத்துலக மனித உரிமை மற்றும் மனிதாபிமான சட்டங்களுக்கு எதிரானவை. இவை போர் குற்றங்களாகவும் கருதப்படும்.

இடம்பெற்று வரும் மோதல்களில் கடந்த ஜனவரி 20 ஆம் நாளில் இருந்து இதுவரை 2 ஆயிரத்து 800 அப்பாவி மக்கள் பலியாகி உள்ளனர்.

7 ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயம் அடைந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் பாதுகாப்பு வலய பகுதிக்குள் இருந்தவர்கள் ஆவர். நூற்றுக்கணக்கான குழந்தைகளும் பலியாகி உள்ளனர். இவ்வளவு குழந்தைகள் பலியாகி இருப்பது அதிர்ச்சி அளிக்கின்றது.

இதே ரீதியில் போர் நீடித்தால், உயிரிழப்புக்களின் எண்ணிக்கை பேரழிவு நிலைக்கு சென்று விடும் என்று அஞ்சுகின்றோம். உணவு மற்றும் அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் தட்டுப்பாடும், மனிதாபிமான சூழ்நிலையை மேலும் சீர்குலைத்து விடும்.

எனவே, அப்பாவி மக்கள் பாதுகாப்பாக வெளியேற வசதியாக, சிறிலங்கா இராணுவமும் விடுதலைப் புலிகளும் தாக்குதலை நிறுத்த வேண்டும். ஐக்கிய நாடுகள் சபையும் இதர


தொடர்ச்சி 02ஆம் பக்கம்



**துரித பணமாற்றுச் சேவை**

- 50 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
- கனடாவில் தொடர்ந்து 17 வருடங்கள் ஒரே இடத்தில் சேவை
- தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

416.267.8221



REALTY EXECUTIVES
Sri Jayasiri
Broker of Record/President
Direct: 416-939-4343
Office: 905-209-7500
Fax: 905-209-7501
Realty Executives GTA Ltd. Brokerage
Executive Mortgage Inc.
HSBC Tower, Liberty Square
3601 Highway 7 East, Suite 1005
Markham ON L3R 0M3
Each office is independently owned and operated.

STANDARD MORTGAGES INC
ANANDA, M.Com, CA
Mortgage Specialist / Financial Consultant
Direct: 416-319-2520
Reliance
Financial & Investment Co Inc
MORTGAGES
▸Residential ▸Commercial ▸Line of Credit
▸Low Interest ▸40 Lenders ▸Pre-approval
▸Re-finance ▸Debt Consolidation
▸Bad or No Credit OK ▸Self-employed OK
▸New Immigrant OK ▸Private Funds also OK
We GET YOU MORTGAGE even if Banks say 'No'
INSURANCE
▸All Insurance Companies ▸Life ▸Critical illness ▸Disability ▸Health & Dental ▸Travel ▸Visitors ▸Mortgage
RESP ▸Govt. grants ▸Highest scholarships paid ▸Flexible
RRSP ▸Excellent growth ▸Reduced taxes ▸Investment loans
Don't miss our FREE SEMINAR on RRSP & REDUCING TAXES
Email: reliancefico@ymail.com, Fax: 647-342-2399

SATHYA SAIRAM DRIVING SCHOOL



- உங்களுக்கு பாஷை ஒரு பிரச்சினையா?
- பரீட்சை கேள்விகள் விளங்காததனால் வாகன எழுத்து பரீட்சையில் அல்லது வீதிப்பரீட்சையில் சித்தியடைய முடியவில்லையா? கவலை வேண்டாம்.
- உங்கள் வாகனம் சம்பந்தப்பட்ட எந்த பரீட்சையிலும் சித்தி அடைய வேண்டுமா?

அழையுங்கள் - 416-831-5217

அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!
Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com
CENTUM™ Veedu Mortgages Inc.

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd.
Suite #206
Scarborough, ON
M1S 2Y3
*Independently Owned and Operated

கதிர்
GTA Square
SOLD OUT !
Last 7 Units Available
Middlefield & Finch
24hr. 416.856.6900
Office: 416.321.6969
Email: kathirs@rogers.com
Call me for a change
Don't Miss Out
Kathir S. Kathirkamanathan P.Eng.
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage
1711 McCowan Rd., #206, Toronto
Independently owned & operated

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife / Today Realty Ltd., Brokerage.
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# டேவிட் மில்லரின் அடியும் டால்டன் மக்கின்டியின் இடியும்

அண்மைய மாநகர மற்றும் மாகாண அரசாங்கங்களின் நடவடிக்கைகள் வீட்டு உரிமையாளர்களை பாரிய அளவில் பாதிக்கவுள்ளன. டொரோண்டோ மாநகர முதல்வர் டேவிட் மில்லர் கடந்த வருடம் அமலுக்கு கொண்டு வந்த மாநகர காணி உரிமை மாற்று வரி (Land Transfer Tax) டொரோண்டோ மாநகரத்தில் விற்பனையாகும் அனேகமான வீடுகள் மற்றும் வர்த்தக கட்டிடங்களுக்கு செலுத்த வேண்டிய காணி உரிமை மாற்று வரியை இரட்டிப்பாக்கியுள்ளது.



இந்த புதிய மாநகர காணி உரிமை மாற்று வரி அமலுக்கு வந்ததிலிருந்து அதுவரை பதினொரு வருடங்களாக மாதாமாதம் தொடர்ந்து அதிகரித்து வந்த டொரோண்டோ மாநகர வீட்டு விலைகள் சரிய ஆரம்பித்து இன்று வரை தொடர்ந்து சரிந்து கொண்டே இருக்கின்றன.

**நல்லையா தயாபரன்** BSSO RHI CMI CEI
***Building Experts Canada Ltd***
***www.buildingexperts.ca***

இந்தப் புதிய மாநகர காணி உரிமை மாற்று வரியானது வீடுகளை விற்று முதியோர் இல்லங்களுக்கு செல்லவுள்ள வயோதிபர்கள் முதல் அண்மையில் குடியேறி முதல் தடவையாக வீடு வாங்க முனைபவர்கள் வரை பாதித்துள்ளது.

தற்போது டால்டன் மக்கின்டியின் ஒன்டாரியோ அரசு ஒன்டாரியோ மாகாண வீட்டு உரிமையாளர்களை பாதிக்கும் நேர்த்தியற்ற நடவடிக்கைகளில் இறங்கி உள்ளது.

இதுவரைகாலமும் ஒன்டாரியோவில் புதிய வீடுகள் (New Home Purchase), வீடு விற்பனை பிரதிநிதிகளுக்கான கொடுப்பனவுகள் (Real Estate Commission), வீட்டு திருத்த வேலைகள், வீடு விற்கும் மற்றும் வாங்கும்போது சட்டத்தரணி, வீட்டு பரிசோதகர், வீட்டு இடமாற்ற (Moving) கட்டணங்கள் ஆகியவற்றுக்கு மாகாண விற்பனை வரியிலிருந்து (PST - Provincial Sales Tax) விலக்கு இருந்து வருகின்றது. தற்போதைய பொருளாதார நெருக்கடிகள் காரணமாக மாகாண அரசின் வருமானங்களை அதிகரித்து செலவினங்களை குறைக்குமுகமாக டால்டன் மக்கின்டியின் அரசு இந்த வரி விலக்கை ரத்து செய்ய திட்டம் தீட்டியுள்ளது?

உதாரணமாக மூன்றரை லட்ச டொலர் புதிய வீடு ஒன்றை வாங்கும்போது மேலதிகமாக பதினேழு ஆயிரத்து தொளாயிரத்து இருபது டொலர் மாகாண விற்பனை வரியாக செலுத்த வேண்டி நேரும். மூன்றரை லட்ச டொலர் விலைக்கு வீட்டை விற்றால் வீடு விற்பனை முகவருக்கு கொடுக்க வேண்டிய ஐந்து வீத கமிசனுடன் மாகாண விற்பனை வரியாக ஆயிரத்து நானூறு டொலரும் கொடுக்க வேண்டி இருக்கும்?

வீட்டு திருத்தல் வேலைகளுக்கும் மாகாண விற்பனை வரி விதிப்பதானது தற்போதைய நிதி நெருக்கடி காலகட்டத்தில் திருத்தல் வேலைகளையும் வீட்டு உரிமையாளர்கள் பின் போடுவதற்கு வழி சமைக்கும்.



தற்போது பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு மத்தியில் புதிய வீடுகளை கட்டி விற்க முயலுபவர்களும், வேலை போய்விடுமா என்ற பயத்தின் மத்தியிலும் புது வீடு வாங்க யோசிப்பவர்களையும் டால்டன் மக்கின்டியின் இந்த மேலதிக வரிச்சுமை தடுத்து நிறுத்த ஒன்டாரியோ மாகாண பொருளாதாரம் மேலும் நலிவடையும்.

தற்போதுள்ள பண நெருக்கடிகளுக்கு மத்தியில் வீடு வாங்க எண்ணுபவர்களை டால்டன் மக்கின்டியின் இந்த புதிய விற்பனை வரி மேலும் இழுத்து நிறுத்த வீடு விலைகள் இன்னமும் சரியும். எரிகிற வீட்டில் புடுங்குவது போல ஏற்கனவே பலவித நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள வீடு உரிமையாளர்களை இன்னல்களுக்கு உள்ளாக்கி வீட்டு விலைகளை இன்னமும் சரிய வைப்பது உகந்த நடவடிக்கையே அல்ல.

அத்துடன் 2009 புதிய பசுமை பேணும் சக்தி மற்றும் பொருளாதார சட்டம் (Bill 150 – Green Energy & Green Economy) மூலம் ஒன்டாரியோவில் வீடுகள் விற்பனை செய்யும்போது சக்திவள விரயம் மற்றும் பாவனை குறித்த கணிப்பீடு (Energy Audit on Energy Consumption & Efficiency) கட்டாயமாக்கப்படவுள்ளது.

வர்த்தக கட்டிடங்கள், தொழிற்சாலைகள், விவசாயம் சம்பந்தமான கட்டிடங்களுக்கு இந்த புதிய சட்டத்திலிருந்து விதி விலக்கு வழங்கப்படும் என டால்டன் மக்கின்டி அறிவித்துள்ளார். கனடிய வரலாற்றில் முதல் தடவையாக இருவருக்கிடையேயான சுதந்திரமான வாங்கி விற்கும் சந்தை (Free Market) வியாபாரத்தில் அரசாங்கம் குறுக்கிடவுள்ளது. இதுவரைகாலமும் ஒன்டாரியோவில் வீடுகள் விற்கப்படும்போது வீட்டின் எந்தவொரு பகுதியாவது கட்டாயம் சோதனைக்குள்ளாக வேண்டுமென சட்டமெதுவும் இருந்தது கிடையாது. கனடாவில் இதுவரை எவருமே வீடுகள் வாங்கும்போது சக்திவள விரயம் குறித்து கணிப்பீடு (Energy Audit) செய்து வாங்கியதும் கிடையாது.

உயிர் ஆபத்து விளைவிக்க கூடிய பழுதான எரி உலைகள் (Furnace), முறையற்ற ஆபத்தான மின்சார விநியோகம், கட்டிட விதிகளை மீறிய கட்டுமானங்கள் போன்றவற்றை சோதனை இடுவதை பற்றிகூட கவலையே படாமல் சக்திவள விரயம் மற்றும் பாவனை குறித்த கணிப்பீடை கட்டாயமாக்கும் டால்டன் மக்கின்டியின் மாகாண அரசின் நடவடிக்கை பலருக்கும் புரியாத புதிராக இருக்கிறது.

சக்தி விரயங்களை தடுக்கும் முறையில் புதிய கட்டிட விதிகளுக்கமைய அண்மையில் கட்டப்பட்ட வீடுகள் விற்கப்படும் போதும் இந்த சக்திவள விரயம் மற்றும் பாவனை குறித்த கணிப்பீடு தேவைதானா என அநேகர் வியக்கின்றனர்.

வீடுகள் வாங்கும்போது வீட்டு பரிசோதனை செய்பவர் எரி உலை, வீட்டு யன்னல்கள் போன்ற சக்திவள பாவனை மற்றும் விரயம் குறித்த பல விடயங்களை பரிசோதிப்பதால் மீண்டும் ஒரு சக்திவள விரயம் மற்றும் பாவனை குறித்த கணிப்பீடு செய்து பணத்தையும் நேரத்தையும் வீணடிப்பது புத்திசாலித்தனமானதாக இருக்க முடியாது.

வீடுகளுக்கான சக்தி விரயம் மற்றும் பாவனை குறித்த கணிப்பீடை கட்டயமாக்குவதன் மூலம் இந்த கணிப்பீடு ஏற்கனவே சரிந்துள்ள வீடு விலைகளை இன்னமும் குறைக்க உதவுமே தவிர ஆக்க பூர்வமாக வேறு எதற்கும் பயன்படாது.

உண்மையில் ஒன்டாரியோ மாகாணத்தில் சக்திவள விரயத்தையும் பாவனையும் குறைக்க வேணுமென டால்டன் மக்கின்டியின் மாகாண அரசுக்கு அக்கறை இருக்குமானால் சக்திவள விரயம் மற்றும் பாவனையை குறைக்கும் நடவடிக்கைகள் பற்றிய அறிவை ஒன்டாரியோ வாழ் மக்கள் மத்தியில் பரவுவதற்கு நடவடிக்கைகள் எடுப்பதோடு அத்தகைய முயற்சிகளுக்கு அரச உதவிகளும் வழங்கலாம். அத்துடன் வர்த்தக நிறுவனகள், தொழிற்சாலைகள் போன்றவற்றை உள்ளடக்காத எந்த ஒரு சக்திவள விரய தடுப்பு நடவடிக்கைகளும் பெரிதாக பலனளிக்க போவதில்லையோடு ஒன்டாரியோ அரசின் நோக்கங்களை கூட சந்தேகத்திற்கு உள்ளாக்குகிறது.

விளைவுகளை புரிந்துகொள்ளாமல் குண்டு சட்டிக்குள் குதிரையோடும் போக்கு வெறும் மடமைத்தனமே ஒழிய வேறு எதுவுமில்லை.

# இலங்கை அரசு...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

சுயாதீன அமைப்புக்களும் நிலைமையை துல்லியமாக கண்டறிய சிறிலங்கா அரசாங்கம் வாய்ப்பளிக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது

வன்னி பாதுகாப்பு வலய நிலை தொடர்பில் அமெரிக்காவும் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளது.

வடபகுதியில் சிறிலங்கா அரசாங்கத்தினால் பிரகடனம் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு வலயத்தில் மோசமடைந்து வரும் நிலைமைகள் தொடர்பாகவும், அதிகரித்து வரும் பொதுமக்களின் இழப்புக்கள் தொடர்பாகவும் அமெரிக்காவின் ஆழ்ந்த கவலையை சிறிலங்கா அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு வெளிப்படுத்தியுள்ள அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலறி கிளிண்டன், பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளில் சிறிலங்கா படையினர் தாக்குதலை நடத்தக்கூடாது எனவும் வலியுறுத்தியிருக்கின்றார்.

சிறிலங்கா அரச தலைவருடன் தொலைபேசி மூலமாகத் தொடர்புகொண்டு உரையாடியபோதே இதனை அவர் வலியுறுத்தியதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்சவுக்கும் ஹிலறி கிளிண்டனுக்கும் இடையிலான இந்தத் தொலைபேசி உரையாடல் இடம்பெற்றது.

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்க வேண்டும் என அரச தலைவர் மகிந்த ராஜபக்சவிடம் கேட்டுக்கொண்ட ஹிலறி, போர் நடைபெறும் பகுதிக்கும், இடம்பெயர்ந்தவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள முகாம்கள் என்பனவற்றுக்கு மட்டுமன்றி இடம்பெயர்ந்தவர்களை விசாரணைகளுக்கு உட்படுத்தும் நிலையங்களுக்கும் அனைத்துலக மனிதாபிமான அமைப்புக்கள் சென்று வருவதற்கான அனுமதியை வழங்க வேண்டும் என வலியுறுத்தியிருக்கின்றார்.

அனைத்து சமூகங்களினதும் நியாயமான அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையிலான அரசியல் தீர்வு ஒன்றை முன்வைப்பதன் மூலமாகவே நிரந்தரமானதும், இறுதியானதுமான தீர்வு ஒன்றைக் காணக்கூடியதாக இருக்கும் என அமெரிக்கா நம்புவதாகவும் ஹிலறி கிளிண்டன் இந்தத் தொலைபேசி உரையாடலின் போது குறிப்பிட்டிருக்கின்றார்.

இதேவேளையில் இந்தத் தொலைபேசி உரையாடல் தொடர்பாக சிறிலங்காவின் இணையத்தளங்கள் சிலவற்றில் திரிவுபடுத்தப்பட்ட செய்திகள் வெளியாகியிருப்பதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்காசிய பிரிவு அதிகாரியான டியானி கெலி தெரிவித்திருக்கின்றார்.

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada**
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

**Sales Reps. Welcome**
For All your Real Estate & Investments Needs!
**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)

* INDEPENDENTLY OWNED AND OPERATED
**HomeLife GTA Realty Inc.** Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969**
145 Traders Blvd # 28, Mississauga -**905.712.2666**




With **Summer Company**, your kids can start up a business of their own and receive up to **$3,000** to run it. They'll get a mentor to guide them and gain valuable business and leadership skills along the way. Who knows, it could be the start of something big. Encourage your kids to apply now at **ontario.ca/summercompany**

Ontario
Paid for by the Government of Ontario


# கம்ப்யூட்டர் உலகம்

## கணினியின் வரலாறு

கணினி, இன்று மனித வாழ்க்கையின் ஒரு முக்கிய அங்கமாக திகழ்கிறது. தொழில்துறை, அரசாட்சி, கல்வி, மருத்துவம், ஆராய்ச்சி, சட்டம், சமூக சேவை, இசை, ஓவியம், திரைப்படம் போன்று பல துறைகளிலும் கணினியின் பங்கு மிக இன்றி அமையாதது. ஆகையால் நாம் இத்துறைகளில் பெரும்மாற்றத்தை எதிர்பார்க்கலாம். கணினியை எங்கு பயன்படுத்தலாம் என்பது நம் கற்பனையால் மட்டுமே கட்டுப்படுத்தப்படுகிறது.

கணினி என்பது என்ன? ஒரு சிறுவனுக்கு அல்லது சிறுமிக்கு அது எவ்வாறு தோற்றமளிக்கிறது? வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் போன்றவற்றின் கலவை என தோன்றலாம். இது ஓரளவுக்கு உண்மை. ஆனால் கணிப்பொறியின் அற்புதமான திறமைகள் இதில் வெளிப்படவில்லை.

கணினி ஒரு மின்னணு இயந்திரம். கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் போன்ற கணிதச் செயல்பாடுகளை கணினியால் செய்யமுடியும். அத்துடன் தகவலைச் சேமித்து வைக்கமுடியும். அதைப் பின்னர் பயன்படுத்திக் கொள்ளலாம். அது ஒரு வினாடியில் பல்லாயிரக்கணக்கான செயல்களைத் தவறில்லாமல் செய்யும்.

கணித ஏரணச் செயல்பாடுகளைச் சுயமாக செயல்படுத்தும் வல்லமை பெற்றது கணினி. அதன் துல்லியமும், வேகமும் மிக அதிகம். சலிப்பின்றி வேலை செய்யும் நண்பன் எனலாம். எண்ணுவதும் கூட்டுவதும் மனித குலத்திற்கு ஆதிகாலத்திலேயே ஏற்பட்ட ஒரு தேவை. எண்ணுவதற்கு விரல்களினால் புள்ளி வைப்பது சிறு கோடு கிழிப்பது என்று தொடங்கினான். எலும்புகளில் கீறி வைத்தான். சிறு கற்கள், மணிகள் போன்றவற்றைப் பயன்படுத்தினான். பிறகு எண்களை உருவாக்கினான். அவற்றைப் பயன்படுத்தி கணக்குகளைச் செய்யத் தொடங்கினான். அவற்றை விரைவாகச் செய்ய முதலில் கையினால் இயக்கும் கருவிகளையும் அடுத்து மின்சாரத்தால் இயக்கும் கருவிகளையும் படைத்தான். அடுத்து வந்ததுதான் இன்றைய மின்னணுக் கணிப்பொறி. இந்த வளர்ச்சியைப் பற்றி தெரிந்து கொள்வது தான் இந்தப்பகுதியின் நோக்கம்.

### கி.மு. 2500 - அபாகஸ் (Abacus)



**- Bala -**

எண் கணிதத்திற்காக கண்டுபிடிக்கப்பட்ட முதல் கருவி அபாகஸ் எனலாம். இதில் நூலிழைகளும் அவற்றில் மணிகளும் இருக்கும். ஒவ்வொரு இழையும் ஒரு பதின்ம (தசம) நிலையையும், ஒவ்வொரு மணியும் ஒரு பதின்ம இலக்கத்தையும் குறிக்கும். நடுவில் உள்ள சட்டத்தின் அருகில் உள்ள மணிகள் ஒரு எண்ணைக் குறிக்கும். முதலில் அபாகஸ் கூட்டலுக்கும் கழித்தலுக்கும் பயன்பட்டது. பின்னர் பெருக்கலுக்கும் வகுத்தலுக்கும் விரிவாக்கப்பட்டது.

### கி.பி. 1614 நேப்பியர் குச்சிகள் (Napier Sticks)

பெருக்கலை விரைவாக செய்ய உதவும் சாதனம் இது. ஜோன் நேப்பியர் (John Napier) என்னும் ஸ்கொட்லாந்துகாரரால் உருவாக்கப்பட்டது. இதில் ஒவ்வொரு இலக்கத்திற்கும் ஒரு குச்சி இருக்கும். இந்த குச்சிகளை தேவையான பெருக்கலுக்கு ஏற்றது போல் அடுக்கி வைத்தால் பெருக்கலை விரைவாக செய்யலாம்.

### கி.பி. 1633 நகரும் சட்டம் (Slide Rule)

வில்லியம் ஆட்ரேட் (william Ougthtred) என்பவர் இதனை உருவாக்கினார். இது லாகரிதம் (Logarithm) என்பதன் அடிப்படையில் செயல்படுகிறது. இதன் இருபுறங்களில் நிலைத்த சட்டங்களும் நடுவில் ஒரு நகரும் சட்டமும் உள்ளது. இதை பயன்படுத்தி பெருக்கலையும், வகுத்தலையும், கூட்டல், கழித்தல் போன்று செய்யலாம்.

### கி.பி. 1642 - சுழல் சக்கர கணிப்பான்

இது பிளேய்ஸ் பாஸ்கல் (Blaise Pascal) என்னும் பிரெஞ்சு அறிஞரால் வடிவமைக்கப்பட்டது. இன்றைய தலைமுறை கணினிக்கு முன்னோடி எனலாம். இதில் நெம்பிகளும் வேகமாற்றிகளும் (Lever and gears) இருந்தன. தன் தந்தையின் கணிப்புகளை விரைவுபடுத்தி பாஸ்கல் இதை உருவாக்கினார். அப்போது அவருக்கு வயது 19.

### கி.பி. 1822 - டிஃபரன்ஸ் இன்ஜின் (Difference Engine)



இது (Charles Babbage) சார்லஸ் பாபேஜ் என்னும் ஆங்கிலேயரால் உருவாக்கப்பட்டது. இவர் கணிதம் மற்றும் பொறியியல் துறையில் அறிஞர். இன்றைய கணினியின் அடிப்படைத் தத்துவங்களை உருவாக்கியதால் இன்றைய கணினியின் தந்தை என்று போற்றப்படுகிறார்.

### கி.பி. 1890 - ஹோல்ரித் டேபுலேடிங் மிஷின் (Hollerith Tabulating Machine)

துளையிடப்பட்ட அட்டைகளை பார்த்து, அவற்றில் உள்ள தகவல்களை படித்து அவற்றை அலசி ஆராயும் தன்மை படைத்தது இந்த கருவி.

அடுத்து நாம் படிக்க இருப்பது கணினியின் தலைமுறைகள். தொடரும்.....


**APPLEMORE AUTOMOTIVE**

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

**416-285-4998**

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# “ஆண்மீகம்” மட்டுமல்ல ஆன்மீகம்

பெண்களை பலவீனமானவர்கள் என்று கருதுகிற வழக்கம், உலகம் முழுவதுமே உள்ளது. உடலளவில் இயற்கையாகவே ஆண்கள் கூடுதலான பலம் பொருந்தியவர்கள். அவ்வளவு தான். ஆனால், எல்லா நிலைகளிலும் பெண்களை பலவீனமானவர்களாக சித்தரிக்கும் போக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவே நடைமுறையில் உள்ளது. பெண்ணை மதிக்காத எந்த ஆணும் தன்னை உணர வழியே இல்லை. ஏனெனில் ஒவ்வோர் ஆணிலும் பெண்மையின் தன்மைகள் உண்டு.

இந்திய ஆன்மீக மரபில், தன்னையுணரும் உச்சநிலையை அடைவதில் அந்தக் காலங்களில் ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமானமாகவே இருந்திருக்கிறார்கள். உள்நிலை வளர்ச்சியில் ஆண்மை பெண்மை என்பதான வேதங்களுக்கு இடமே இல்லை. மேலே இருக்கும் தோலைத்தான் ஆண் என்றும் பெண் என்றும் அடையாளம் காண்கிறீர்கள். கனியின் தன்மையை நிர்ணயிக்கப்போவது மேலே உள்ள தோலல்ல. ஆன்மீகம் கனிவதற்கு ஆண்தோல் - பெண்தோல் என்ற பேதங்கள் இல்லை. இயற்கையின் படைப்பில் உடலளவில் பெண்கள் பலவீனமாக கருதப்பட்டாலும் உளவியல் நிலையில் அவர்கள் மேம்பட்ட நிலையிலேயே இருக்கிறார்கள். வேத காலந்தொட்டு, எத்தனையோ பெண் துறவிகள் ஆன்மீகத்தில் மிக உயர்ந்த நிலைகளை எட்டியிருக்கிறார்கள். வழிபாட்டு முறைகளிலேயே தொன்மையான வழிபாடு, தாய்வழிபாடுதான். இன்று கூட ஆண் தெய்வங்களைக் காட்டிலும் பெண் தெய்வங்களை வழிபடுவது அதிகமாக இருப்பதற்கும் இந்த ஆதிமுறைதான் காரணம்.

வேத காலங்களில் பிராமணர்களைப்போல பெண்களும் பூணூல் அணிந்திருந்தனர். ஏனெனில், பூணூல் அணியாமல் வேதங்களையும் உபநிதங்களையும் பயிலக்கூடாது என்றொரு நியதி இருந்தது. அத்தகைய பெண்களில் ஒருவர், மைத்ரேயி.

தன்னையுணர்ந்தவராகவும் அரசராகவும் திகழ்ந்த ஜனகர், தன்னுடைய அரசவையில் ஆன்மீக மாநாடொன்றைக் கூட்டினார். ரஷிகளும் முனிவர்களும் கூடி தங்களின் பேரறிவையும் ஆன்மீக அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளும் விதமாக அந்த மாநாடு அமைந்தது. முனிவர்கள் மட்டுமின்றி வேதவிற்பன்னர்களும் அறிவிலும் ஆன்மீகத்திலும் உச்சந்தொட்டவர்களும் ஒன்றாகத் திரண்டிருந்தனர்.

விவாதங்கள் தொடங்கின. கூரிய அறிவின் எல்லையையும் தாண்டி, சூட்சுமமான நிலையை நோக்கி விவாதங்கள் நகரத் தொடங்கின. மிக நுட்பமான நிலை நோக்கி விவாதங்கள் உயர உயர, அதன் நுண்மையைத் தாக்குபிடிக்க முடியாதவர்கள் மெல்ல நழுவினர். தொடர்ந்து விவாதத்தில் ஈடுபட்டவர்கள் இரண்டே பேர்கள்தான். ஒருவர் மைத்ரேயி. இன்னொருவர் யக்ஞவால்கியர். ஆன்மீக சம்வாதங்களில் கடவுள்களையே தோற்கடித்துக் கொடி நாட்டியவராகக் கருதப்பட்டவர் யக்ஞவால்கியர். அவர் ஞானத்தின் வரம்பு கண்டவர். அவருக்கும் மைத்ரேயிக்கும் இடையிலான சம்வாதம் நாட்கணக்கில் நீடித்தது. அவர்கள் எது குறித்துப் பேசுகிறார்கள் என்பது அந்த இருவரையும் தவிர ஒருவருக்கும் புரியாத அளவு உயர்ந்த தளத்தில் விவாதம் வளர்ந்துகொண்டே போனது.

ஒரு காலகட்டத்தில் மைத்ரேயி தொடுத்த வினாக்கள் மிகமிக சூட்சுமமாய் ஆகிவிட்ட நிலையில் அந்த வினாக்களை யக்ஞவால்கியர் பலவிதங்களில் தவிர்க்க முயன்றார். முடியாமல் போன நிலையில், தன்னை மறந்தவராக, “நிறுத்து! இதற்குமேல் ஒரு கேள்வி கேட்டாலும் உன்உடல் துண்டு துண்டாக வெடித்துச் சிதறும்” என்று கூச்சலிட்டார் யக்ஞவால்கியர். உடனே ஜனகர் தலையிட்டு, வாதத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தார். எப்படியென்றால், வென்றவருக்கான சன்மானத்தை மைத்ரேயிக்கு வழங்கினார் ஜனகர்.

தன் குறைபாட்டைப் புரிந்துகொண்ட யக்ஞவால்கியர், மைத்ரேயின் பாதங்களைப் பணிந்து தன்னை சீடராக ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினார். அப்போதுதான் யாரும் எதிர்பாராத ஒன்று நடந்தது. அவரை சீடராக ஏற்றுக் கொள்ள மைத்ரேயி மறுத்துவிட்டார். மாறாக, தன்னுடைய கணவராக ஏற்றுக் கொண்டார். காரணம், ஞானத்திலும், புரிதலும் மைத்ரேயிக்கு நிகராக வேறு யாருமே இல்லை. ஓரளவு நெருங்கி வந்தவர் யக்ஞவால்கியர் மட்டும்தான். இருவரும் இல்லறத்தில் இணைந்தனர்.


## Sadhguru's Inner Engineering Program in Detroit , USA

**Date: 1 - 5 April 2009**

**Location: Hellenic Cultural Center**
**36375 Joy Rd, Westland, MI 48185 - USA**

**Free Intro talk: Wed 1 Apr - from 7pm - 8pm - all are welcome**

**Session Info & timings: (Attendance on 5 days is mandatory.)**

**Weekdays: 7:00pm - 10:15pm, Saturday & Sunday: 8:00am - 6:00pm**

**for more info call: 1-866-424 ISHA (4742) or 248 790 2486**
**Email: detroit@ishafoundation.org Website: www.ishafoundation.org**

தமிழில் தொடர்புகளுக்கு: 416.300.3010 www.ishayoga.org


**எழுத்தாக்கம்: கலைமாமணி மரபின்மைந்தன் முத்தையா**

குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு யக்ஞவால்கியர் தன்னிடம் இருக்கும் செல்வங்களையெல்லாம் மைத்ரேயி வசம் ஒப்படைத்துவிட்டு, தன்னை உணர்வதற்காக, வனங்களுக்குள் செல்ல முற்பட்டபோது, “இந்த அல்பமான செல்வங்களை நான் ஏற்பேன் என்று நீங்கள் எப்படி நினைத்தீர்கள்? உள்நிலைத் தேடலை நானும் மேற்கொள்ள வேண்டும்” என்றார். இருவரும் முழுமையான ஆன்மீகவாழ்வை மேற்கொண்டு, தம்மை உணர்ந்த ஞானியராய் வனங்களிடையே வாழ்ந்தார்கள்.

இப்படி பண்டைய பாரதத்தில் எத்தனையோ பெண்கள் ஆன்மீகத்தில் உயர்ந்த நிலைகளைத் தொட்டிருக்கிறார்கள். எல்லா விதத்திலும் முழுமைபெற்ற சமூகங்களில் பெண்மை மேலோங்கியிருப்பது இயல்பு. குறைந்தது ஆண்களுக்குப் பெண்கள் சமமாயிருப்பதாவது அத்தகைய சமூகங்களில் காணப்படும்.

கி.மு.3000 த்திலிருந்தே இந்தியாவில் ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமானமான வாழ்வை நிகழ்த்தி வந்தார்கள். மங்கோயோ - மத்திய சீனா போன்ற பகுதிகளில் இருந்து, வாழ்வின் சூட்சுமமான அம்சங்களை அறிந்தேயிராத அளவு கொடூரமான வாழ்க்கை வாழ்ந்தவர்களின் படையெடுப்புக்குப் பிறகு பெண் தன் சுதந்திரத்தை இழக்கும் சூழல் ஏற்பட்டது. ஏனெனில், படையெடுத்து வந்தவர்கள் பொன்னை அபகரிப்பது போலவே பெண்ணையும் அபகரிக்கத் தொடங்கிய பிறகு பெண் பாதுகாக்கப்பட வேண்டியவர் ஆனாள். ஆணின் பாதுகாப்புக்குள் வாழத் தொடங்கியவள் ஆணின் கட்டுப்பாடுகளுக்கு ஆளானாள். சாஸ்திரங்களும் ஸ்மிருதிகளும் மாற்றி எழுதப்பட்டன. ஸ்மிருதிகள், வாழ்வின் அடிப்படை உண்மையை உணர்த்துபவை.

அடையாளங்களுக்கு அப்பாற்பட்ட அந்த நூல்களே மாற்றி எழுதப்பட்ட போது அவற்றின் பெரும்பகுதி பெண்களுக்கான கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்தன. பெண் பூணூல் அணியக் கூடாது என்பதில் தொடங்கி, பெண்ணுக்கு மோட்சம் கிடையாது என்பதுவரை விதவிதமான வகைகளில் பெண்ணை பலவீனமானவளாக அவை சித்தரித்தன. எல்லாம் ஒன்று என்று அத்வைதம் பேசுபவர்கள் கூட பெண்களை 3 படி தாழ்வாகவே பார்த்தது விசித்திரம்.

வேத காலங்களில், குடும்பத்தை உருவாக்கும் சுதந்திரமும், உள்நிலையில் வளர்ந்த பிறகு குடும்பத்தை உதறும் சுதந்திரமும் பெண்களுக்கிருந்தது. காலப்போக்கில் பெண்களுக்கு துறவறம் மறுக்கப்பட்டது.

உறவோ, துறவோ, தன் வாழ்வை நிர்ணயித்துக் கொள்கிற உரிமை பெண்களின் கைகளிருந்து பிடுங்கப்பட்டுவிட்டது. இந்த இருபத்தோராம் நூற்றாண்டிலும் இதே நிலை தொடர்கிறது.

உயிர்களின் பிறப்புக்கு பெரும்பங்களிப்பைப் பெண் தருகிறாள். அதில் ஆணின்பங்கு சிறிதளவுதான். எனவே பிரபஞ்ச இயக்கம் பெண்ணைச் சார்ந்துதான் இருக்கிறது.



**சத்குரு வாசுதேவ்**

அப்படிப்பட்ட நிலையில், பெண்ணை ஆண் ஏற்க மறுப்பானென்றால், ஒன்று அவன் அறியாமையில் இருக்கவேண்டும்.

ஆலயத்தில் அம்பாள் முன்னர் விழுந்து வணங்குபவன், வீட்டில் மனைவியை அடித்து உதைத்தால் அது அறியாமை மட்டுமல்ல. அயோக்கியத்தனமும் கூட. இதற்கு மாற்று முயற்சி என்று கருதி, மேலை நாடுகளில் பெண்கள் ஆண்களைப் போல் நடந்துகொள்ள முயல்கிறார்கள். இது மிகவும் ஆபாசமானது. பெண்ணாக இருப்பது தாழ்வானது என்று கருதுகிற பெண்தான் ஆணைப்போல் நடந்து கொள்ள ஆசை கொள்வாள். பெண், தன் முழுமையான பெண்மையில் முழு சுதந்திரத்துடன் வாழ்வதுதான் பெண் விடுதலை என்று சொல்லக்கூடியது.

விவேகானந்தரிடம் சமூக சேவகர் ஒருவர் வந்து, “பெண் விடுதலைக்கு ஆதரவாக செயல்பட விரும்புகிறேன். அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? ” என்று கேட்டார். “நீங்கள் ஒன்றும் செய்யாமல் விலகி வழிவிட்டாலே போதும். தங்கள் விடுதலையைப் பெண்களே பார்த்துக் கொள்வார்கள்” என்றார் விவேகானந்தர்.

வாய்ப்புகளின் வாசல் திறக்கும் போது தன்னை பெண்ணே சீரமைத்துக் கொள்ளலாம். இப்போது அதற்கான சூழல் ஏற்பட்டு வருகிறது. பெண்ணுக்குப் பெண்ணே எதிரி என்ற குற்றச்சாட்டிலும் உண்மை இல்லாமல் இல்லை. இதையெல்லாம் பெண்கள் தாண்டி வரவேண்டும்.

சின்ன விஷயங்களில் எல்லாம் பெண் திருப்தியடைந்து விடுகிறாள் என்பது காலங்காலமாய் இருக்கும் கருத்துக்களில் ஒன்று. மைத்ரேயி தன் கணவரிடம் கேட்ட கேள்வியை எல்லாப் பெண்களுமே கேட்க வேண்டும். வாழ்வில் பெரிய இலட்சியங்களை நோக்கி பெண் நடக்கிற போதுதான் பெண்மை எந்த விதத்திலும் தாழ்ந்ததில்லை என்பதை உலகம் உணரும்.







# பேரண்டக் கதை

## பிரபஞ்சம் - 36

பேரண்டக்கதையின் இரண்டாம் பகுதியின் இறுதி நாயகன் கலிலியோ கலிலி பற்றி இனிப்பார்ப்போம். பிராகி, கெப்பினர் கலிலியோ மூவருமே ஒரே காலப்பகுதியில் வாழ்ந்தவர்கள். மூவருமே சிறந்த விஞ்ஞானிகள். ஆயினும் நவீன விஞ்ஞானத்தின் கதவுகளைத் திறந்து வைத்தவர். கலிலியோ தான். விஞ்ஞான முடிவுகள் கணிதவடிவிலோ அல்லது பரிசோதனைகளின் வாயிலாகவோ நிரூபிக்கப்படவேண்டும் என்ற வழக்கினை, நியதியினை, முறையினை உறுதியாகக் கொண்டு வந்தவர் கலிலியோ. இதனால் சிலர் கலிலியோவைத்தான் உலகின் முதலாவது விஞ்ஞானி எனவும் கூறுவர். கலிலியோவின் இந்த நிரூபண முறையானது விஞ்ஞான உலகினையே ஒரு உலுக்கு உலுக்கி விட்டது. விளைவாக விஞ்ஞானம் புதுப்பொலிவுடன் வேகமாகவும் ஆரோக்கியமாகவும் வளரத் தொடங்கியது. வளர்ந்து கொண்டும் போகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக அரிஸ்ரோற்றலின் கூற்றுக்கள் எதிர்வு கூறல்கள் பொய் எனக் காட்டப்பட்டன. அதற்காக அரிஸ்ரோற்றலை குறைவாக மதித்துக் கூறமுடியாது. ஏனெனில் அவர் வாழ்ந்த காலப்பகுதிக்கு ஏற்றதான அறிவியல் நிலையில் இருந்தே அவரின் முடிவுகள் வந்தன. மேலும் அரிஸ்ரோற்றலின் முடிவுகளில் இருந்தே புதிய முடிவுகளும், கண்டுபிடிப்புகளும் அவற்றினைத் திருத்தும் வண்ணமாக வந்தன என்பதனையும் நாம் ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.



### கலிலியோ கலிலி

1564ஆம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் திகதியில் இத்தாலியில் பிறந்தவர் கலிலியோ கலிலி. பெப்ரவரி 15 வலன்ரைன் தினம் என்பது உங்களுக்கு ஞாபகம் வரும். 1564 இன் பெப்ரவரியில் தான் உலகப் புகழ் பெற்ற ஓவியர் மைக்கல் ஆஞ்சலோ இறந்தார். கலிலியோவின் காலத்தில் அரிஸ்ரோற்றலின் தத்துவங்கள், கொள்கைகள் மிகவும் உறுதி பெற்றிருந்தன என்பதையும் ஞாபகத்தில் கொள்ளுங்கள். கலிலியோ பணக்காரக் குடும்பத்தில் பிறந்திருக்கவில்லை. ஏழு பிள்ளைகளில் மூத்தவராகப் பிறந்த கலிலியோ, தகப்பனாரின் மறைவின் பின்னர், தமது இளம் வயதிலேயே குடும்ப பாரத்தைச் சுமக்க வேண்டி வந்தது. தனது இரண்டு சகோதரிகளின் சீதனத்திற்காக, தமது 45வயதுவரை கலிலியோவிற்கு கடினமாக உழைக்க வேண்டி இருந்தது.

கலிலியோ முதலில் வைத்தியராக வரும் நோக்கில் பல்கலைக்கழகத்தில் வைத்தியத்துறையில் கல்வி கற்றுக்கொண்டு வந்தார். வைத்தியத்துறையில் இரண்டாம் ஆண்டில் படித்துக் கொண்டு இருக்கையில் சந்தர்ப்ப வசத்தால், ஒருநாள் கணித வகுப்பொன்றில் நடந்த விரிவுரையைக் கேட்க வேண்டி வந்தது. அவ்விரிவுரையினால் கணிதத்தின் மேல் ஈடுபாடு ஏற்பட்டு, கணிதத்துறையிற்கு தனது படிப்பினை மாற்றிட விரும்பினார். ஆனாலும் பல்கலைக்கழக நிர்வாகம் அதற்கு உடன்படவில்லை. ஆயினும் கணிதத்தில் தனது நாட்களைச் செலவிட்ட கலிலியோ, இறுதியில் எந்தவொரு பட்டமும் பெறாமலேயே பல்கலைக்கழகத்தினை விட்டு வெளியேற வேண்டி வந்தது. பின்னாட்களில் அதே பல்கலைக் கழகம் கணித விரிவுரையாளராக கலிலியோவை நியமித்து. இவ்விதமாகவே ஒரு (பிரபல) வைத்தியராக வரவேண்டிய கலிலியோ, கணித நிபுணராக, விஞ்ஞானியாக மாற வேண்டி வந்தது.

அரிஸ்ரோற்றலின் பல விஞ்ஞானக் கூற்றுக்களுக்கு விளக்கங்களையும், நிருபணங்களையும் கேட்டு, சர்ச்சைக்குரிய மனிதராக மாறினார் கலிலியோ. அரிஸ்ரோற்றலின் பல கூற்றுக்களைத் தனது எளிய பரிசோதனைகளின் ஊடாகப் பிழை என நிரூபித்துக் காட்டினார். இதனால் கத்தோலிக்கத் திருச்சபையின் அதிருப்திக்குள்ளானார். இவரது புதிய நிறுவல்களை கூட திருச்சபை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்றுக்கொள்ளத் தயங்கியது. கத்தோலிக்கராக இருந்த, அதிலும் வத்திக்கானின் செல்வாக்கு மிகுந்த மனிதராக இருந்த கலிலியோ இயற்கையின் நடத்தைகளுக்கும் இயல்புகளுக்கும் ஏன் என்ற கேள்விகளைக் கேட்டு, அவற்றிற்கான விடைகளை எளிய பரிசோதனைகளின் மூலமாகப் பெற்றுத் தெளிவு பெற்றார். அம்முடிவுகளை அன்றைய அறிவியல் உலகத்திற்கும் தெரிவித்தார். அம்முடிவுகளில் பல அந்நாட்களில் உலகம் கொண்டிருந்த பல நம்பிக்கைகளுக்கு முரணாக இருந்தன. எமது நோக்கம் பேரண்டம் பற்றியது என்பதனால் அவற்றினைப் பற்றி விரிவாகவும், தனித்தனியாகவும் நான் கூறவரவில்லை. விண்வெளி பற்றிய அவரது தெளிவுரைகளையே இப்பகுதியில் நாம் பார்க்கப் போகின்றோம்.

கலிலியோ அவரது ஆரம்பக் காலத்தில் விண்வெளியில் அதிக ஈடுபாடு கொண்டவராக இருந்ததாகத் தெரியவில்லை. கொப்பநிக்கசின் பேரண்ட மாதிரி வடிவமானது (கதிரவனை மையப்படுத்திய பேரண்டம்) அரசல் புரசலாக விஞ்ஞானிகளிடையே பேசப்பட்டுக் கொண்டு வந்த காலம்.



- கனி -

# சிரசின்மேல் சிலுவை

முட்டைப் பூச்சிகளின்
இறப்புக்குக்
கணக்குண்டு
வலையில் சிக்கிய
நுளம்புகளுக்குக்
கணக்குண்டு.

குருதி
காமம்
கண்ணியத்துக்கு
அப்பாலும்
கவிதைக்கு
ஆழமுண்டு.

பிறப்பின் பயன்
நிறைவாழ்வு என்பதை
வினாக் குறியாக்கும்
செயற்கை
இயற்கை
சிந்திய
சீற்றங்களுக்கும்
கணக்குண்டு.

சிறுகச்சிறுகச்
சேர்த்துக் கட்டிய
தேன்கூடு
ஒரே நாளில் கைமாறும்
உலகமயத்தில்,

சிந்தும் வியர்வைகள்
எரிகட்டைகளாக
நிலத்தில்
புதைக்கப்படுகின்றன

நீள்காலத்தின்
நிலக்கரிச்
சுரங்கங்களாக!



முத்துராஜா

# சிறீலங்கா கிரிக்கெட் அணியை பந்தாடியது யார்?!

## விளையாட்டுத் தகவல்கள் 256

'அரசன் அன்று அறுப்பான் தெய்வம் நின்று அறுக்கும்' அரசியல் வேறு விளையாட்டு வேறு என்று யார் வாதிட்டாலும், அரசியலையும் விளையாட்டையும் கலந்து திணிக்கும் சிங்கள இனவாத அரசிற்கு இது ஒரு பலத்த அடி என்றால் மிகையாகாது.



ஒரு பக்கத்தில் தமிழ் மக்களை கொன்று குவித்துக் கொண்டு மறுபக்கத்தில் விளையாட்டு சதுரங்கத்தில், இந்திய கிரிக்கெட் அணி, பாகிஸ்தானுக்கு போகமாட்டோம் என்று முடிவெடுத்த போது, தமிழ் மக்களை கொன்று குவிப்பதற்கு மேலும் மேலும் ஆயுதங்களை பாகிஸ்தானிடம் இருந்து வாங்கலாம் என்ற நப்பாசையில் பாகிஸ்தான் அரசை திருப்திப் படுத்துவதற்காக, சிங்கள இனவாத அரசு 'இதோ நாங்கள் விளையாட வருகிறோம்' என்று வரிந்து கட்டிக்கொண்டு ஓடியது. இந்த சிறிலங்கா அணியை விளையாட்டு மைதானத் திற்கு செல்லும் போது தெருவில் வைத்து பந்தாடியது யார்?

இதனை வாசகர்களின் ஊகத்திற்கு விடுகிறோம்.

### தொடரை கைப்பற்றியது அவுஸ்திரேலியா

டர்பனில் நடைபெற்ற 2வது கிரிக்கெட் ரெஸ்ற் போட்டியில் தென்ஆப்பிரிக்காவை 175 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்கடித்து தொடரைக் கைப்பற்றியது அவுஸ்திரேலிய அணி. கிங்ஸ்மீட்



மைதானத்தில் செவ்வாய்க்கிழமை நடந்த 5ஆம் நாள் ஆட்டத்தில் 370 ஓட்டங்களைச் சேர்த்து 2வது இன்னிங்ஸை இழந்தது தென்ஆபிரிக்கா. 37.4 ஓவர்கள் மீதமிருந்த நிலையில் அணி தோல்வியைத் தழுவியது. சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட காலிஸ் 93 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். டி வில்லியர்ஸ் 84 ஓட்டங்களுடன் வெளியேறினார். பீட்டர் சிடில் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். உணவு இடைவேளையின்போது 6 விக்கெட்டுகளை இழந்து 307 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது அந்த அணி. 546 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு 2வது இன்னிங்ஸைத் தொடங்கிய தென்ஆபிரிக்க அணி 4ஆம் நாளான திங்கட்கிழமை முடிவில் 2 விக்கெட்டுகளை இழந்து 244 ஓட்டங்களைச் சேர்ந்திருந்தது.

அடுத்த போட்டி - கடைசிப் போட்டி கேப்டவுனில் வரும் 19ஆம் திகதி தொடங்குகிறது. ஜோகன்ஸ்பர்கில் நடந்த முதல் போட்டியில் 162 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 1 - 0 என அவுஸ்திரேலியா முன்னிலை பெற்றிருந்து.

### மீண்டும் வருண பகவான் புகுந்து விளையாடினார்



இந்தியா நியூசிலாந்து 4வது ஒருநாள் போட்டியில் சேவாக்கின் அதிரடி சதத்தால் இந்தியா 84 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்தியா, நியூசிலாந்து அணிகள் மோதும் 4காவது ஒரு நாள் போட்டி ஹாமில்டனில் நடைபெற்றது. டொஸ் வென்ற நியூசிலாந்து அணி பேட்டிங்கை தேர்வு செய்தது.

நியூசிலாந்தின் துவக்க ஆட்டக்காரர்கள் மெக்கல்லம், ரைடர் அணிக்கு நல்ல துவக்கம் தந்தனர். ரைடர் 46 ஓட்டங்களும், மெக்கல்லம் 77 ஓட்டங்களும் எடுத்தனர். இரண்டுமுறை மழை குறுக்கிட்டதால் ஓவர்கள் இருதரப்புக்கு 47 ஆக குறைக்கப்பட்டன. கடைசி ஓவர்களில் மெக்கிளஷான், எல்காட் ஜோடி சிறப்பாக விளையாடி அணியின் புள்ளிவிபரத்தை உயர்த்தினர். நிர்ணயிக்கப்பட்ட 47 ஓவர்களில் நியூசிலாந்து அணி 5 விக்கெட்டுகளை இழந்து 270 ஓட்டங்கள் எடுத்தது.

இந்திய தரப்பில் இஷாந்த் சர்மா 2 விக்கெட்டுகளையும், யுவராஜ் சிங், பதான், ஜாகிர்கான் தலா ஒரு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். மழை காரணமாக இந்தியாவிற்கு 36 ஓவர்களில் 220 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. 220 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இந்தியா சேவாக் அதிரடியாக விளையாடி 60 பந்துகளில் சதம் அடித்தார். இந்தியா 23.3 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 201 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் மழை குறுக்கிட்டது. சேவக் (125), காம்பிர் (63) அவுட்டாகாமல் இருந்தனர். தொடர்ந்த மழை பெய்ததால் 'டக்வொர்த் லீவிஸ்' முறைப்படி இந்தியா 84 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. ஆட்டநாயகன் விருது சேவாக்கிற்கு வழங்கப்பட்டது.

**சாதனை** - இப்போட்டியில் வென்றதன் மூலம் இந்தியா 3 - 0 கணக்கில் தொடரை கைப்பற்றி நியூசிலாந்து மண்ணில் முதல் முறையாக ஒருநாள் தொடரை கைப்பற்றி இந்திய அணி சாதனை படைத்துள்ளது.

மழை குறுக்கீடு - இன்றைய போட்டியில் வருண பகவானின் விளையாட்டே சிறப்பாக இருந்தது. மழை குறுக்கீடு காரணமாக நியூசிலாந்திற்கு 47 ஓவர்களாக குறைக்கப்பட்டது. பின்னர் இந்திய விளையாடிய போது பலமுறை மழை குறுக்கிட்டதால் முதலில் 47 ஓவர்களில் 281 ஓட்டங்கள் எடுக்க வேண்டும் எனவும், அடுத்து 43 ஓவர்களில் 263 ஓட்டங்கள் எடுக்க வேண்டும் எனவும் இறுதியில் 36 ஓவர்களில் 220 ஓட்டங்கள் எடுக்க வேண்டும் எனவும் இந்தியாவிற்கு இலக்கு மாற்றப்பட்டது. மீண்டும் 23.3 ஓவர்களில் மழை பெய்ததால் இந்தியா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.



**எஸ். கணேஷ்**


NEED MORTGAGE ADVICE?
Speak to an advisor



MSD Investments

- Mortgage Loans - 1st & 2nd
- Residential & Commercial
- Buying Home With Bad or Poor Credit
- Stated Income - Self Employed or Salaried
- Debt Consolidation
- Bankrupcy
- Refinance
- All kinds of Loans -
  1. Business Loans
  2. Credit Lines - Secured & Unsecured
  3. Personal Loans

*Are you paying lot of rent, Why not get your own home.* *Call for the expert advice*

647-344-3822 647-344-4340

Raphael Maharaja
Barrister, Solicitor & Notary Public
கனேடியத் தமிழ் வழக்கறிஞர்

- வீடு, காணி, வர்த்தகச் சட்டம்
- அகதி, குடிவரவுச் சட்டம்
- விபத்து இழப்பீடு
- குடும்பச் சட்டம்
- தத்துவப் பத்திரம், இறுதி விருப்பாவணம், சத்தியப் பத்திரம்
- ஆங்கில, தமிழ், சிங்கள மொழிபெயர்ப்பு

> Real Estate & Business Law
> Refugee & Immigration Law
> Personal Injury
> Family Law
> Estate Planning, Power of Attorney & Affidavits
> English, Tamil & Sinhala Translation



Tel: 416-847-7077 Fax: 416-847-7088

# முதல் தடவையாக வீடு வாங்குபவர்கள்







வீடு, மனை வியாபாரம் இன்றைய காலகட்டத்தில் மந்த நிலையில் இருப்பதால் வீட்டைவிற்று வாங்க இருப்பவர்கள், விற்கப்பட இருக்கும் வீட்டை பார்வைக்கு நேர்த்தியாக அழகாக்கி வைப்பதன் மூலம் விற்கும் செயல்முறையை இலகுவாக்கலாம்.

முதல் பார்வையில் மனதிற்கு பிடித்து விட்டால் பின்னர் வீட்டிலுள்ள நல்ல விடயங்களே தெரிய வரும். இல்லாது போனால் தமிழில் இருக்கும் பழமொழி ‘முதல் கோணல் முழுவதும் கோணல்’ என்பது போலாகிவிடும். ***‘First Impressions more Important in Slow Market’***

பொதுவாக, வீட்டுச் சந்தை மிகவும் ஆரோக்கியமாக இருக்கும் போது, கவர்ச்சி யில்லாத வீடுகளும் இலகுவாக விற்கக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. ஆனால் வீட்டுச் சந்தை மந்த நிலையிலுள்ளபோது, வாங்குபவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், விற்பதற்கு சந்தைக்கு கொண்டு வருவதற்கு முன்பாக சிறு சிறு திருத்த வேலைகள்: பூச்சடித்தல், வீட்டின் வெளிப்புறங்களை துப்பரவு செய்தல், தேவை யில்லாத பொருட்கள் அப்புறப்படுத்தல் போன்ற வற்றில் மிகவும் கவனம் எடுத்தல் அவசியமாகும்.

இன்று இருக்கும் வீட்டுச் சந்தையின் நிலையில், பார்வைக்கு சிறப்பாக காணப்படும் வீடுகளே விற்கப்படுகின்றன.

Staging என்று அழைக்கின்ற வீட்டை விற்பதற்கு ஏற்ப அழகுபடுத்துகின்ற முறை வீட்டை இலகுவாக விற்பதற்கு உதவி செய்கின்றது என்பதனை புள்ளி விபரங்களால் காணக்கூடியதாக உள்ளது. மிக விரைவாகவும் நல்ல விலையில் விற்பதற்கு இந்த முறையைப் பாவிக்கலாம். (குறிப்பு - அனுபவமிக்க உங்களது ஆஸ்தி முகவரைக் கேட்கவும்)

‘Staging’ என்பது இதனைத் தொழிலாக செய்கின்ற நிறுவனங்கள் தமது அறிவுறுத்தல்களை தெரியப்படுத்தி, அதற்குரிய தகுந்த அறிவுரைகளைத் தருவார்கள். குறிப்பிட்டளவு செலவு உள்ளது என்பதனையும் கவனத்தில் கொள்ளவும். (பொதுவாக இதற்காக செலவு செய்யும் பணத்தைவிட கூடியளவு பணத்தை வீடு விற்பனை மூலம் பெறலாம் என்பது அனுபவ உண்மை.)

இன்றைய வீட்டுச்சந்தையில், முதல்தரம் வீடு வாங்குபவர்களிற்கு அரசினால் கொண்டுவரப்பட்ட பல அனுகூலங்கள் காத்திருக்கின்றன. முதல் தடவையாக வீடு வாங்குபவர்களே சந்தையில் மிக அதிகமாக உள்ளவர்கள். இதுவரை கனடிய சரித்திரத்தில் அறிந்திராத அடமானக்கடன் வசதி, (முதன்மை வட்டிவீதம் 2.5%, 5 வருடத்திற்கு வட்டிவீதம் 4.29%), 35 வருடத்திற்குரிய அடமானம் திருப்பி கொடுக்கும் காலம் போன்றவை. இன்றைய காலகட்டம் வாடகைக்கு இருப்பவர்களுக்கு சொந்தமாக வாங்குவதற்கு ஏற்ற காலமாகக் கொள்ளலாம். தொழில் புரிந்து கொண்டு வாடகைக்கு இருப்பவர்கள் சொந்தமாக வீடு வாங்குவதனைப்பற்றி சிந்திப்பது பலன் அழிக்கலாம்.

முதல் தடவை வீடு வாங்குபவர்கள் RRSP என அழைக்கப்படும் Registered Retirement Saving Plan இலிருந்து Down payment ஆகப்பாவிக்க கூடிய வசதி உண்டு. இந்த தொகை $20,000 இலிருந்து $25,000 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

$2000 வரை நிலமாற்று வரி விலக்கு உண்டு. ரொறொன்ரோப் பகுதியில் முதல் தடவையாக வீடு வாங்குபவர்களிற்கு ரொறொன்ரோ நகரத்தால் கொண்டுவரப்பட்ட மேலதிக நிலமாற்றுவரி செலுத்தத் தேவையில்லை.

$10,000 வரையான திருத்தவேலை சம்பந்தப்பட்ட செலவுகளிற்கு வரிச்சலுகை உண்டு. (இந்தச்சலுகை ஏற்கனவே ஆஸ்தி கொண்டுள்ளவர்களிற்கும் பொருந்தும்) அதாவது வரிச்சலுகை $1350 வரை கிடைக்கலாம். மற்றும் முதல் தடவையாக புதிய வீடு வாங்குபவர்களுக்கு Closing செலவுகளுக்காக $750 வரை வரி நிவாரணம் கிடைக்கலாம்.

இன்றைய வீட்டு வியாபாரத்தில் $300,000 இற்கு உட்பட்ட வீடுகள் அடுக்குமாடிக்கட்டிட அலகுகளே அதிகமாக போட்டியாக விற்கப்படுகின்றன. இதற்கு முதல் தடவையாக வாங்குபவர்களே முக்கியகாரணம்.

அத்துடன் முதல்தடவை வீடு வாங்குபவர்களிற்கு வீட்டை வாங்கி, வீட்டிற்கு சென்றபிற்பாடு மேலதிக திருத்த வேலைகளிற்குரிய செலவுகளிற்கு போதியளவு பணம் கையில் இருப்பது குறைவு. இதனால், நல்ல நிலையிலுள்ள திருத்த வேலைகள் அல்லாத வீடுகளையே இவர்கள் வாங்குகின்றார்கள்.

எனவே வீட்டை விற்பதற்கு சந்தையில் கொண்டுவருவதற்கு முன்பாக, அதற்கேற்ப திருத்த வேலைகளை செய்து சந்தைக்கு கொண்டு வந்தால் விற்கப்படும் செயல்முறை இலகுவாக்கலாம். அத்துடன் அதிக விலை பெறக்கூடிய சாத்தியங்கள் அதிகம்.

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் - 294**


ஸ்காபரோ, மிசிசாக 2 இடங்களில், **140**இற்கு மேற்பட்ட வெற்றிபெற்ற வீட்டுப்பிரதிநிதிகள்

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife GTA Realty Inc.,** Brokerage*

“கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது”

1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969** /145 Traders Blvd # 28, Mississauga - **905.712.2666**

*Independently owned & operated



**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)

# CATERING / RESTAURANT FOR SALE

- *Running business*
- *Recently renovated*
- *Location: Markham / Eglinton*
- *Asking price $45,000 only*
- *Resonable Rent*
- *Don’t miss this chance*

**Nantha Aiyadurai**
**Cell: 613 850 9931**

COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்




Relocation Service
OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

**Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1**

# தொல்காப்பியரின் நாடக வழக்கு

**கடந்த இதழ் தொடர்ச்சி**

## செவிலியும் நற்றாயும்

செவிலி என்பவள் தலைவியை வளர்த்த தாய். தலைவியைப் பெற்றெடுத்த தாய் நற்றாய் எனப்படுவள். செவிலி நாற்றாயின் தோழி ஆவள். தலைவியை வளர்த்தவள் என்பதனால் நற்றாயினும் செவிலி தலைவியைப்பற்றி நன்கு அறிந்தவளாக இருப்பாள். தலைவன் தலைவி காதல் வாழ்க்கையை வழிப்படுத்துவதிலும் இவளுக்குப் பொறுப்பு உண்டு. தலைவிமீது மிகுந்த அன்புடையவளாதலாலும் அவளது அந்தரங்கங்களைப் பேணும் கட்டுப்பாடு உடையவளாதலாலும் தாய் என்றே சிறப்பித்துக் கூறத் தக்கவள் இவள். இவ்வித செவிலியின் சிறப்பை,

ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின்
தாயெனப் படுவாள் செவிலி யாகும்(6)

என்பர் தொல்காப்பியர். இவள் வாயிலாகவே நற்றாய் தன் மகளின் களவொழுக்கத்தை அறிவாள். அறிந்து அதன் இயல்பையும் தன் மகளின் காதலனின் பொருத்தத்தையும் செவிலியாகிய தன் தோழியுடன் கலந்துரையாடுவாள். தாயைக் 'கடுஞ்சொல் அன்னை' என்று தலைவி சுட்டும் இடங்களும் உண்டு. எனினும் தாய் மகளின் எதிர்கால நல்வாழ்வு குறித்த வழிகளையே மேற்கொள்ளும் இயல்பினள்.

## தோழி

இவள் தலைவியின் உள்ளத்தையும் செயற்பாடுகளையும் நன்கு அறிந்தவள். தன்னலம் இல்லாதவள். தலைவியின் நல்வாழ்வில் அக்கறையுடையவள். தலைவியின் காதல் வாழ்க்கைக்குப் பெருந் துணையாக இருப்பவள். தலைவனின் குணங்களை ஆராய்ந்து தலைவிக்குச் சொல்லுவாள். தலைவியின் நிலைப்பாட்டைத் தலைவனுக்கு எடுத்துரைப்பாள். தலைவனிடம் குறைகள் கண்டால் அவற்றை நேரடியாகவோ மறைமுகமாகவோ எடுத்துக்கூறி, அவனைத் திருத்த முயல்வாள். இருவரது கூட்டங்களுக்கும் ஒழுங்கு செய்வாள். தலைவன் தலைவி காதலை நற்றாய்க்கு செவிலித் தாய் இனிதாக எடுத்துரைத்து அவளது ஒப்புதலைப் பெற்றுக் கொடுப்பாள். இவளது மதிநுட்பமான செயற்பாடுகளும் உரைகளும் அகத்திணை நூல்களில் நயம் கொழிக்கும் பகுதிகளாக இடம்பெற்றுள்ளன.

## பிற பாத்திரங்கள்

பாங்கன்: இவன் தலைவனின் தோழன்.
காமக்கிழத்தியர்: இவர்கள் தலைவனுடன் உறவு வைத்துக்கொள்ள விரும்பும் பரத்தையர். இதனால் தலைவன் தலைவியருக்கிடையில் ஊடல் நிகழும். அதனைஅறிந்து காதற்பரத்தையர் தீர்த்து வைக்கவும் முயல்வர்.
பாணன்: இவனே பரத்தையையும் தலைவனையும் கூட்டிவைக்கத் துணையாக இருப்பவன்.
கண்டோர்:இவர் தலைவனையோ தலைவியையோ அல்லது இருவரையும் ஒன்றாகவோ தனிவழி காணும் மாந்தர்.
அறிவர்: தலைவன் தலைவியின் மதிப்பைப் பெற்ற குரவர்.
பார்ப்பார்: இவர் பார்ப்பன குலத்தவர். தலைவன் தலைவிக்கு அறிவுரை பகர்பவர்.
விறலியர்: ஆடல் பாடலில் வல்ல இப்பெண்டிர் தலைவன் பரத்தையின் பொருட்டுத் தலைவியைப் பிரிந்து செல்வதற்கு உடந்தையாய் இருப்பர்.
கூத்தர்: தலைவனை மகிழ்விக்கக் கூத்தாடும் ஆண்கள். இளையர்: தலைவனின் ஏவலர்.
தேர்ப்பாகன்: தலைவனின் தேரோட்டி.

## மெய்ப்பாடு

மெய்ப்பாடு என்றால் உடம்பின் வெளிப்பாடு என்று பொருள். எதன் அல்லது எவற்றின் வெளிப்பாடு? அகத்தின் அழகுதான் முகத்திலே தெரியும். உள்ளத்தில் உள்ளதைத்தான் உடம்பு வெளிப்படுத்தும். இதனை மணிவாசகப் பெருமான் இறைவனுக்கே எடுத்துரைக்கின்றார்:

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழ விடேனுடையாய் என்னைக் கண்டு கொள்ளே.

இத்திருவாசகம் பத்தி உணர்வை, அதன் உறுதிப்பாட்டை உடல் வெளிக்காட்டும் விதத்தை விளக்குகின்றது.

பொருளதிகாரத்தில் வரும் ஒரு பகுதிக்கு மெய்ப்பாட்டியல் என்று பெயர். அப்பகுதியில் தொல்காப்பியர் தலைவன் தலைவி முதலாய பாத்திரங்களுக்குரிய மெய்ப்பாடுகளை விளக்குகின்றார். அகத்திணை, புறத்திணை சார்ந்த ஒழுக்கங்களால் உள்ளத்திலே தோன்றும் உணர்ச்சிகளை உடல் எத்தகைய முறைகளில் வெளிக்காட்டும் என்பதைச் சிறப்பாக ஆராய்ந்து கண்டவர் தொல்காப்பியர். கண்டவற்றுள் சிறந்தவையாக எட்டு மெய்ப்பாடுகளைப் பின்வருமாறு தொகுத்துத் தருகின்றார்:

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என
அப்பால் எட்டாம் மெய்ப்பா டென்ப.(7)

நகை என்பது சிரிப்பு. அது முறுவலித்து நகுதலும் அளவே சிரித்தலும் பெருகச் சிரித்தலுமென மூவகையில் வரும்.

அழுகை என்பது அவலம். அது தான் துன்பத்தால் அழுதலும் பிறர் அவலங் கண்டு அழுதலுமென இருவகைப்படும்.

இளிவரல் என்பது இழிவு. மருட்கை என்பது வியப்பு, அற்புதம் எனினும் பொருந்தும்.

அச்சம் என்பது பயம். பெருமிதம் என்பது வீரம். வெகுளி என்பது கோபம். உவகை என்பது காமம் முதலிய மகிழ்ச்சி. இவ்விளக்கம் பேராசிரியர் உரையை அடிப்படையாகக் கொண்டது(8).

**தொடரும்**

**கவிஞர் வி. கந்தவனம்**






ஒன்ராரியோ மாகாண அரசின் மருத்துவ காப்புறுதி திட்டம் (OHIP COVERAGE) என்பது பல்வேறு வகையான மருத்துவ செலவுகளுக்கு கை கொடுக்கின்றது. இக்காப்புறுதி திட்டத்தின் மூலம் பல்வேறு வகையான மருத்துவ சேவைகள், வைத்தியசாலையின் சேவைகள் ஆகியவற்றினை இலவசமாக பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கின்றது என்பது நாம் யாவரும் அனுபவபூர்வமாக எதிர்கொண்டு வரும் விடயமாகும்
ஆனால் இலவசமாக பல்வேறு வகையான சேவைகளை பெற்றுக்கொள்ள வாய்ப்புகள் உள்ள மாகாண வாசிகளுக்கு தங்களுக்கு வைத்தியசாலைக்கு வெளியே மருந்துகள் வாங்க வேண்டுமாயின் தங்கள் சொந்த பணத்தினையே செலவழிக்க வேண்டியுள்ளது.

ஆனால் பின்வரும் நிலையில் இருப்போருக்கு மட்டும் மாகாண அரசின் சில சலுகை திட்டங்கள் மருந்துகளையும் இலவசமாக வாங்கி கொள்ள கை கொடுக்கின்றது. அவையாவன

1. 65 வயதினை அடைந்தோர் அல்லது அதற்கு மேற்பட்டோர் (Seniors - 65 & Older)
2. சமூக உதவி பணம் பெற்று வாழ வேண்டிய நிலையில் உள்ள ஒன்ராரியோ மாகாண வாசிகள் (Ontario Residents Who are on social assistance)

3. நீண்டகாலமாக மருத்துவ விடுதியில் அல்லது விசேட மருத்துவ கவனிப்பில் இருக்கும் நிலையில் உள்ள ஒன்ராரியோ வாசிகள் (Ontario Residents who reside in long term care homes and homes for special care)


# The minimum wage is going up.

**If you're an employer, here's what you need to know.**

| | General Minimum Wage | Students under 18 and working not more than 28 hours per week or during a school holiday | Liquor Server | Hunting & Fishing Guides: for less than five consecutive hours in a day | Hunting & Fishing Guides: for five or more hours in a day whether or not the hours are consecutive | Homeworkers (people doing paid work in their home for an employer) |
|---|---|---|---|---|---|---|
| Current wage rate | $8.75/hour | $8.20/hour | $7.60/hour | $43.75 | $87.50 | 110% of the minimum wage |
| Mar. 31, 2009 wage rate | $9.50/hour | $8.90/hour | $8.25/hour | $47.50 | $95.00 | 110% of the minimum wage |

On March 31, 2009, the general minimum wage will increase to $9.50 per hour from the current rate of $8.75 per hour.

**To find out more about how the new minimum wage guidelines affect employers and employees, call or visit the Ministry of Labour web site.**

Paid for by the Government of Ontario

Ontario

**1-800-531-5551 www.ontario.ca/minimumwage**


# மருந்து செலவுகளுக்கு மாகாண அரசு வழங்கும் ஒரு இலவச சலுகை

## (TRILLIM DRUG PROGRAM TDP)

4. சிறப்பு பயிற்சி பெற்ற மருத்துவதாதிகளின் கவனிப்பில் உள்ள மருத்துவ நிலையங்களில் தங்கியிருக்கும் ஒன்ராரியோ வாசிகள் (Ontario residents who are receiving professional home care services)


சிவ. பஞ்சலிங்கம் B.Com.,

(Licensed Insurance Broker)

காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:

416.321.0999


மேற்குறிப்பிட்ட நான்கு நிலையினுள் இல்லாதவர்கள் மருந்துகள் வாங்கும் செலவுகளுக்கு என பின்வரும் இரண்டில் ஒரு இடத்தில் நிவாரணம் பெறவேண்டும்.

1. வேலை இடங்களில் குழுவாக செய்து வைத்திருக்கும் மருத்துவ காப்புறுதி ஒப்பந்தம். (Group medical coverage at working place)
அல்லது
2. தனியாக சொந்த பணத்தில் பெற்று வைத்திருக்கும் மருத்துவ காப்புறுதி திட்டம். (Private health care plan)

இரண்டாவதாக செய்து வைத்திருக்கும் ஒப்பந்த மருத்துவ காப்புறுதி திட்டத்திற்கு மாத கட்டு பணம் அதிகமாக செலுத்த வேண்டியிருக்கும்.

இங்கு மேற்குறிப்பிட்ட எந்த அம்சங்களுக்குள்ளும் இருந்து தங்கள் மருந்துகள் வாங்கும் செலவுகளுக்கான நிவாரணம் பெற முடியாதவர்களுக்கு மாகாண அரசினால் ஒரு சலுகை உருவாக்கப்பட்டு வழங்கப்பட்டு வருவதனை அறிந்துள்ளீர்களா?

அதுவே! றில்லியம் மருந்து திட்டம் (Trillium Drug Program) என்பதாகும்.

சரி! மாகாண அரசினால் வழங்கப்படும் இவ் 'றில்லியம் மருந்து திட்டத்தில்' சேருவதற்கு தகுதியானவர்கள் யார்?

1. ஒன்ராரியோ மாகாண சுகாதார மருத்துவ காப்புறுதி திட்டத்தில் (OHIP Coverage) பதியப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. மேலே குறிப்பிடப்பட்ட எந்தவொரு மருந்துகள் பெறும் சலுகை திட்டத்திலும் நிவாரணம் பெற தகுதியுடையவராக இருத்தல் கூடாது.
3. தனியார் மருத்துகள் வாங்கும் நிவாரண திட்டத்தில் சேர்ந்தவராக இருத்தல் கூடாது. அப்படி இருந்தாலும் 100% மருந்து செலவுகளை கொடுத்து தீர்க்கும் திட்டமாக இருத்தல் கூடாது.
4. தங்களின் வருமானத்தில் மருந்துகள் வாங்குவதற்காக அதிக பணம் செலவழிக்கும் நிலைமையில் இருப்பவராக இருத்தல் வேண்டும்.

இம் மருந்துகள் வாங்கும் நிவாரண சலுகை திட்டத்தில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் தகவல்களை பெற வேண்டிய இடம் பின்வருமாறு.

TRILLIUM DRUG PROGRAM
P.O.BIX 337, STATION - D
ETOBICOKE, ONTARIO M9A 4X3

தொலைபேசி - 416.642.3038
அல்லது 1.800.575.5386
மின் அஞ்சல் - Trillium@resolve.com

இணயதளம் - www.health.gov.on.ca

தேவையான விண்ணப்பபடிவங்களை இங்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம். மேலே குறிப்பிட்ட இம்மாகாண அமைச்சின் இணையதளத்தில் இருந்தும் பதிவு இறக்கம் செய்து கொள்ளலாம்.

ஒரே விண்ணப்பத்தில் கணவன், மனைவி, பதினாறு வயதுக்குட்பட்ட பிள்ளைகள் என சேர்த்து பதிந்து கொள்ளலாம். இவ்விண்ணப்பத்தில்

- முழுபெயர், ஆணா, பெண்ணா என்ற விபரம்.
- மாகாண மருத்துவ சுகாதார இலக்கம் (Health Card Number), பிறந்த திகதி.
- சமூக காப்புறுதி இலக்கம் (Social Insurance Number)
- விலாசம், தொலைபேசி இலக்கம்.
- கனடாவின் வருமானவரி நிறுவனத்திற்கு சமர்பிக்கப்பட்ட தேறிய வருமானம். (Net Income)
- மருந்துகள் வாங்குவதற்கு வேறு ஏதாவது காப்புறுதி திட்டம் இருந்தால் அவைபற்றிய விபரங்கள்.
- விண்ணப்பத்தில் கைச்சாத்திடுவதுடன் கனடாவின் வருமானவரி நிறுவனத்திலிருந்து தங்கள் சொந்த வருமானங்கள் தொடர்பான தகவல்களை பெறும் உடன்பாடு வழங்கும் கையொப்பமும் அளிக்கப்படல்வேண்டும்.

விண்ணப்பம் பரிசீலனை செய்து ஏற்று கொள்ளப்பட்ட பின்பு ஒப்பந்த இலக்கத்தை தபாலில் அனுப்புவார்கள். இதனை வழமையாக மருந்து வாங்கும் மருந்து கம்பனியில் சமர்ப்பித்து மருத்துவ காப்புறுதி இலக்கத்தினையும் கொடுத்து பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

இக்காப்புறுதி திட்டத்தில் பதிவு செய்யும் காலம் என்பது பொதுவாக ஒவ்வொரு வருடத்திலும் ஆகஸ்ட் 01 ம் திகதியில் ஆரம்பித்து மறுவருடம் யூலை 31 ம் திகதி முடிவடையும் மாதிரியே ஒருவருட காலம் உருவாக்கப்பட்டு இருக்கும். பின்னர் ஒவ்வொரு யூலை மாத இறுதியிலும் புதுப்பித்து கொள்ளப்படும்.

**மருந்து செலவில் தங்களின் சிறு பகுதி கொடுப்பனவு** (Deductible)

ஒவ்வொருவரின் தேறிய சம்பள வருமானத்திற்கு ஏற்ற மாதிரி (family or Individual Net income) மருந்து செலவில் தங்களின் ஒரு சிறு கொடுப்பனவு என்பது இங்கு இக்காப்புறுதி திட்டத்தினால் ஒவ்வொரு வருடமும் முடிவு செய்யப்படுகின்றது. மருந்து கம்பனியில் மருந்து சீட்டினை கொடுத்து மருந்துகள் வாங்கும் போது ஒரு சிறு பகுதி தொகையினை தங்கள் சொந்த பணத்தில் கொடுக்க வேண்டும். மிகுதி தொகையினை மருந்து கம்பனி தங்களின் இக்காப்புறுதி திட்டத்தில் இருந்து அறவிட்டு கொள்ளுவார்கள்.

தங்களின் சிறுபகுதி கொடுப்பனவு என்பது ஒவ்வொரு மருந்து வாங்கும் போதும் வேறுபடலாம். இங்கு இவ் இலவச காப்புறுதி திட்டத்தின் உதவியால் வாங்கப்படும் மருந்துகள் என்பது ஒன்ராரியோ மாகாணத்தின் மருந்து அட்டவணையில் அங்கீகரிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். சுமார் 3200 க்கு மேற்பட்ட பெயரில் உள்ள மருந்து வகைகள் தற்போது அங்கீகரிக்கபட்ட மருந்துகளாக உள்ளது. அது தவிர மாகாணத்தில் அனுமதிப்பத்திரம் பெற்ற வைத்தியரினால் இம்மருந்தினை குறிப்பிட்ட நோயாளி உட்கொள்ளலாம் என்ற உத்தரவு வழங்கப்பட்ட நிலையில் (Prescribed by a Licensed Doctor) இருத்தல் வேண்டும்.



# ‘நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்”

## மூலிகைப்பொருட்கள் இரச குணவீரிய விபாங்களுக்கு (தன்மைகளுக்கு ) ஏற்ப வியாதிகளைக் குணமாக்கும்

### சுக்கு (வேர்க்கொம்பு)




இதன் தாவரவியல் பெயர் Zingiber officinalis ஆகும். இதனை வேர்க்கொம்பு என அழைப்பதுண்டு. இஞ்சிக் கிழங்கில் சுண்ணாம்பு பூசி உலர்த்திய பகுதிதான் வேர்க்கொம்பாகும். உஸ்ணவீரியத்துடன் உறைப்புச்சுவையை உடையது. வெப்பத்தை உண்டு பண்ணுவதுடன், பசியை ஏற்படுத்தும் தன்மையுடையது. அத்துடன் வயிற்றின் வாயுத் தன்மையை அகற்றக்கூடியது.

எனவே இதன் செயலின் ஆற்றலைப் பற்றிப் பார்ப்போம். எந்த விதப்பேதி (Diarrhea) ஆனாலும் வேர்க்கொம்பை எடுத்து நன்கு செருக்கித் துப்பரவு செய்து சிறு துண்டுகளாக வெட்டித் தூளாக்கிப் பசுவின் மோர் விட்டு நன்கு அரைத்து 1 தே.கரண்டி வீதம் காலை, மாலை இருவேளை கொடுத்து வர பூரண குணம் கிடைத்து விடும்.

சாதாரண விக்கல் ஏற்படும் போது வேர்க்கொம்புத்தூளுடன் தேன் கூட்டிக்கொடுக்க விக்கல் நீங்கிச் சுகநிலையடைவீர். தலைவலி ஏற்படும்போது தூளை நீரில் குழைத்து நெற்றியில் பற்றிட வலி நீங்கி விடும்.

ஒரு சுண்டு நீரில், வேர்க்கொம்பு தூள் ஒரு மே.கரண்டி இட்டு குடிநீராக்கிப் பசுப்பாலும் வெல்லமும் சேர்த்துப் பாவித்து வந்தால், பலம், வீரிய விருத்தி, மனஉற்சாகம் யாவும் தென்படும்.

குளிருடன் சுரம் ஏற்படும்போது வேர்க்கொம்பும், மல்லியும் சேர்த்துக் குடிநீர் செய்து காலை, மாலை வயதிற்கு ஏற்ப ஒரு மே.கரண்டி எடுத்து வர சுகம் கிடைக்கும். அத்துடன் இரு பாதங்களிலும் வேர்க்கொம்புத்தூளை எடுத்து நன்கு தேய்த்துவிட குளிர்நிலை கூடிய விரைவில் அகன்று விடும். இவை யாவும் கை கண்டமுறையாகும்.

மேலும் சுக்கை (வேர்க்கொம்பு) எடுத்து நன்கு செருக்கி துப்பரவு செய்து வாயில் இட்டு மென்றிட பல்வலி, பற்கூச்சம் யாவும் நீங்கி விடும். 1/4 தே.கரண்டி சுக்குத்தூளுடன் சர்க்கரை சேர்த்து வெந்நீருடன் காலை, மாலை பாவித்துவர வாயுவினால் ஏற்பட்ட வயிற்றுவலி நீங்கிக் குணம் கிடைக்கும். இருநாட்கள் பாவித்து வந்தால் போதுமானதாகும். இந்த ஆயுர்வேத வைத்தியர்கள் தாங்கள் தயாரிக்கும் மருந்துகளில் பெரும்பாலும் இதனைச் சேர்ப்பதுண்டு.

உதாரணம் - வேர்க்கொம்புச்சூரணம். இதனைப் பெரிய பற்பம் எனவும் கூறுவர்.

| | |
|---|---|
| தயிர் சுண்டி சூரணம் | தாளிஸாதி சூரணம் |
| ஹிங்குவாஸ்டக சூரணம் | திரிமூர்த்தி சூரணம் |
| சிவதைச்சூரணம் | ஜீரண லேகியம். |

போன்றவற்றைக் கூறலாம். இவை பெரும்பாலும் உரிய நோய்களுக்கு திறமை பெற்றவையாகும். வைத்தியர்களின் ஆலோசனை மூலம் நோயை நன்கு நிதானித்து (Diagnosis) கொள்வது சாலச் சிறந்தது.

### வசம்பு



இதன் தாவரவியல் பெயர் Acorus Calamus ஆகும். இதனை ‘உரைப்பான்’ என மறுபெயர் கொண்டழைப்பர். இது ஒருவகை பூண்டு இனத்தைச் சேர்ந்ததாகும். பாவனைக்கு இதன் வேரை எடுப்பதுண்டு. அதுவே வசம்பாகும். இதில் ஒருவகை மணமும் உண்டு. உஷ்ண வீரியமும் கபத்தை (சளி)க் கட்டுப்படுத்தும் இயல்புடையது. அடிவயிற்றில் சாதாரண வயிற்றுவலி ஏற்படும் போது வசம்பினை எடுத்து தீயில் இட்டுக் கரியாக்கி தூள் பாகம் செய்து ஆமணக்கெண்ணெயில் குழைத்து உரிய இடத்தில் பூசிவிட வலி நீங்கி விடும்.

வசம்பை எடுத்து துப்பரவு செய்து நல்ல மல்லியும் சேர்த்து குடிநீராக்கி காலை, மாலை இருவேளை பாவித்து வர வயிற்றுப் பொருமல் பசியின்மை, அசீரணம் யாவும் அகன்று விடும்.

தொண்டைக்கம்மல், இருமல், சளித்தன்மை யாவற்றுக்கும் வசம்பு மிகவும் நன்மை பயக்கக்கூடியது.

வசம்பை சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் சில மருந்துகளில் சேரும் கூட்டுச் சரக்குகளுடன் சேர்த்துக் கொள்வதுண்டு. பலன் கண்டோர் பலர்.

உதாரணம் - வாந்திபேதி சூரணம், மூலநிவாரண மும்மூர்த்தி லேகியம், கானசூரணம். இச்சூரணம் பாடகர்களுக்கு மிகவும் நன்மை பயக்கக்கூடியது.

ஏலாதி சூரணம் என்பவற்றை எடுத்துக் கூறலாம். இந்த வசம்பை நமது வர்த்தகர்களின் கடைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

### பாகல்



இதன் தாவரவியல் பெயர் Momordica charantia ஆகும். இதனை ‘காரவல்லி’ என மறுநாமம் கொண்டு அழைப்பர். இது ஒரு கொடிவகையானது. இதன் இலை, விதை, காய், பழம் பாவனைக்கு எடுப்பதுண்டு. மருந்துகள் தயாரிக்கும் போது இதன் இலை கூடுதலாக எடுப்பதுண்டு. ஒருவருக்கு மாலைக்கண் ஏற்படும் போது (பகலில் பார்வை நன்று, மாலையின் பின் பார்வை மங்கல்) நல்ல பாகல் இலையை எடுத்து அதன் சாற்றை முறைப்படி பெற்று, மிளகு ஓரளவு சேர்த்து அரைத்து கண்களைச் சுற்றி, வெளிப்புறமாக பற்றிட நாளடைவில் பார்வையின் பலனை பெற்றிட முடியும்.

(5 வயதிற்குமேல்) சிறு பிள்ளைகளுக்கு வாந்தியுடன் ஓங்காளம் வரும் போது பாகல் இலைச்சாற்றுடன் கறிமஞ்சள் தூள் சிறிதளவு சேர்த்து கலக்கி காலை, மாலை வயதிற்கு ஏற்ப 1/4, ½ தேக்கரண்டி கொடுக்க யாவும் தணிந்து விடும். எதற்கும் வைத்தியர்களின் பார்வை மிகவும் நன்மைபயக்கும்.

சிறுவயதினை உடைய பிள்ளைகளுக்கு கீரைப்பூச்சி (Pin Worm) வயிற்றில் ஏற்பட்டு வயிற்றில் சில வேளைகளில் தொந்தரவுகளை கொடுத்து, மலவாசலால் வெளிவருவதுண்டு. இந்நிலையில் பிள்ளைகள் தங்கள் மலவாசலில் அரிப்புத்தன்மை ஏற்படுவதினால் வேதனையுடன் காணப்படுவார்கள். கைவிரல்களை மலவாசல் பகுதிக்கு கொண்டு செல்வதைத் காணக்கூடியதாக இருக்கும். எனவே இந்நிலை ஏற்படும்போது நன்கு துப்பரவான பாகல் இலையை எடுத்து முறைப்படி சாற்றை எடுத்து வயதிற்கு ஏற்ப காலை 1, 2 தேக்கரண்டி கொடுத்து வர நாளடைவில் மலத்துடன் கீரைப்பூச்சி வெளியேறுவதைக் காணலாம். வைத்தியர்களின் ஆலோசனை முக்கியம்.

### நீரிழிவு (Diabetes)

அதாவது மதுமேகம் உள்ளவர்கள் பாகல் இலைச்சாற்றில் 1, 2 அவுன்ஸ் பாவித்து வந்தால் இரத்தத்தில் உள்ள சீனித்தன்மை குறைந்து வருவதை அறியமுடியும். எனவே நாளாந்தம் உண்ணும் உணவுடன் பாகல் காய் சம்பல், கறி, சுண்டல் பாவித்து வருவதினால் நன்மையுண்டு. தூள், உப்பு குறைத்து பால்கறியாகவும் உண்ணலாம்.

நீரிழிவு நோயினால் பாதிக்கப்படாதவர்களும் இடையிடையே பாகல்காயினை சமையலில் சேர்த்து பாவித்து வருவதினால் நன்மையுண்டு. மேலும் வைத்தியர்கள் நோயாளர்களுக்கு மருந்துகள் கொடுக்கும்போது மருந்தின் செயலை பாகல் காய் சேர்ந்த கறிவகைகள் முறித்து விடும் என்பதினால் பாவிக்காதபடி தடுப்பதுண்டு எனலாம். நன்மைக்கேயாகும்.

இந்த பாகற்காய் இங்கு எங்கும் பெற்றுக்கொள்ள முடியும். இதன் இலை, இங்குள்ள வீடுகளில் மரக்கறிவர்க்கத்துடன் பாகல் செடியும் உண்டாக்கி வருவதினால் பெறமுடியும்.


**வைத்திய கலாநிதி**

**கே.ரி. கோபால்**



D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 416.939.2013



**New Home Warranty Inspections**

**Pre-purchase Home Inspections**

***Nalliah Thayabharan BSSO CMI CEI RHI***

Building Science Specialist of Ontario®

Certified Master Inspector®

Registered Home Inspector®

***Building Experts Canada Ltd***

***416 332 1743 / www.buildingexperts.ca***

**Commercial Building Inspections**

**Environmental Assessments** Phase I, II & III

Specializing in Commercial Malls, Motels & Gas Stations

***Building Experts Canada Ltd***

***Tel.416 332 1743 / Fax 416 754 7032***

***www.buildingexperts.ca***

# சான்றோர் என்கை ஈன்றோர்க்கு அழகு

'கேடு இல் விழுச் செல்வம் கல்வி'. அது ஒருவனுக்கு கட்டாயம் தேவை. ஏனெனில் கண்ணுடையர் என்போர் கற்றோர் எனப்படுகின்றது. அத்துடன் கல்வியே செல்வம் என்பதும் கருத்தில் கொள்ளப்படவேண்டியது.

குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு.

கல்வியின் நோக்கம் மனதில் உள்ள ஆற்றல்களை, திறமைகளை, வல்லமைகளை வெளிப்படுத்தி அவற்றிற்கேற்ப தன்னை ஸ்தரப்படுத்தி வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக் கொள்வதேயாகும். கல்வியே உயிர்க்கு உறுதுணையாக அணிகலனாக ஆதாரமாக அமைவது. கல்விப் புலமையே நம்மை அணிசெய்யும் அணிகலனாகும். அதுவே நமக்கு அழகு தருவதாகும்.

இடைவனப்பும் தோள்வனப்பும் ஈடின்வனப்பும்
நடைவனப்பும் நாணின் வனப்பும் - புடைசால்
கழுத்தின் வனப்பும் வனப்பல்ல எண்ணோடு
எழுத்தின் வனப்பே வனப்பு.
என்று ஏலாதி கூறுகின்றது.

கல்வியின் வனப்பை திருக்குறள் பின்வருமாறு வலியுறுத்துகின்றது.
'நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில் நலம்
மண்மாண் புனைபாவை யற்று'

பல நூல்களை நுணுகிக் கல்லாதவனுடைய அழகு மண்ணால் புனையப்பட்ட பொம்மையை ஒத்தது. இம்மைப் பயனை விளைவிப்பதுடன் மறுமைப்பயனையும் தருவது கல்வி. 'மறுமைக் கண் நலங்கல்வி' என்று திரிகடுகம் கூறுகின்றது. ஒருபிறவியில் கற்ற கல்வி எழு பிறவிகளிலும் துணை நிற்கின்றது என்பர் வள்ளுவர்.
'ஒருமைக் கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்புடைத்து'



மேலும் 'இம்மை பயக்குமால் ஈயக்குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாம் காணோம் கல்வி போல்
மம்மர் அறுக்கும் மருந்து' என்பது சிறுபஞ்ச மூலம். கற்றவர்க்கு எங்கு சென்றாலும் அவர் கற்ற கல்வி உதவும், உணவளிக்கும். 'கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்றார் ஔவையார்.

'மன்னனும் பாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையன் - மன்னர்க்கு
தன் தேசமல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாஞ் சிறப்பு'

கல்வி கற்பதற்கு ஏற்ற பருவம் இளமைப் பருவமாகும். தாய் தந்தையரின் அரவணைப்பில், உலகத் துன்பங்கள் அண்டாத இளமைப்பருவமே கல்வி கற்பதற்கு சிறந்த பருவமாகும். மேலும் மனித மூளையின் அமைப்பும் கல்வி பயில அப்பருவத்தில் பெருந்துணை புரிகின்றது. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பதும், ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்பதும் இளமையிற் கற்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றது. உலகில் உள்ள குற்றங்களில் இளமையிற் கல்லாதிருப்பதும் ஒன்று. இதனை இளமையிற் கல்லாமை குற்றம் என்று நான்மணிக்கடிகை உணர்த்துகின்றது.

பல நூல்களை நாடிக் கற்காத மூத்தமகன் அவனது தந்தைக்கு அட்டமத்து சனியனாகத் துன்பப்படுத்துவார் என்கின்றார் ஔவையார்.

பிச்சை புகினும் கற்றல் நன்றே என்று இனியவை நாற்பது கூறுகின்றது. அதிவீரராம பாண்டியரும் இக்கருத்தை வலியுறுத்தும் வகையில் பின்வருமாறு கூறியுள்ளார்.
கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே
இரத்தலை புலவர் உலகம் கடிந்துள்ள போதிலும் கல்விக்காக இரத்தல் பழியன்று.

புதல்வர்களை நல்ல அறிவுடையோர் என்று பெரியோர் சொல்வது அவர்களைப் பெற்றவர்களுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கும். எனவே புதல்வர்கள் நல்வழியில் நடந்து கற்றோரால் நன்கு மதிக்க வாழ வேண்டும்.

இக்கருத்தினை 'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைத் சான்றோன் எனக் கேட்ட தாய்' என்ற குறட்பா வலியுறுத்துகின்றது. இது தாய் அடையும் மகிழ்ச்சியையும் பெருமையையும் குறிக்கின்றது.

'தம்மின் தம்மக்கள் அறிவுடமை மானிலத்து
மன்னுயிர்க்கெல்லாம் இனிது' இது தந்தை அடையும் பெருமிதத்தை உணர்த்தி நிற்கிறது. மக்களை அவையில் முந்தியிருக்கச் செய்தல் தந்தையர்க்குரிய கடனாகும்.

**நா. க. சிவராமலிங்கம்**




Legislative Assembly of Ontario | Assemblée législative de l'Ontario

## Bill 139, Employment Standards Amendment Act (Temporary Help Agencies), 2009

## Projet de loi 139, Loi de 2009 modifiant la Loi sur les normes d'emploi (agences de placement temporaire)

The Standing Committee on the Legislative Assembly will meet to consider **Bill 139, An Act to amend the Employment Standards Act, 2000 in relation to temporary help agencies and certain other matters.**

The Committee intends to hold public hearings in Toronto on March 25, 2009.

Interested people who wish to be considered to make an oral presentation on **Bill 139** should contact the Committee Clerk **by 4:00 p.m. on Wednesday, March 18, 2009.**

Those who do not wish to make an oral presentation but wish to comment on the Bill may send written submissions to the Committee Clerk at the address below **by 5:00 p.m. on Wednesday, March 25, 2009.**

An electronic version of the Bill is available on the Legislative Assembly website at: **www.ontla.on.ca.**

**Bas Balkissoon, MPP**
**Chair/Président**

**Tonia Grannum**
**Clerk/Greffière**

**Telephone/Téléphone:** (416) 325-3519
**Facsimile/Télécopieur:** (416) 325-3505
**TTY/ATS:** (416) 325-3538

**Room 1405, Whitney Block/Bureau 1405, édifice Whitney**
**Queen's Park, Toronto, ON M7A 1A2**

Collect calls will be accepted./Nous acceptons les appels à frais virés.
*Ces renseignements sont disponibles en français sur demande.*





இன்றைய தமிழ் எழுத்தாளர்களில் நம்பர் வன் வரிசையில் சிலாகிக்கப்படும் அ. முத்துலிங்கத்தின் 'உண்மை கலந்த நாட்குறிப்புகள்' என்ற நாவல் வெளிவந்துள்ளது. சென்னை உயிர்மை பதிப்பக வெளியீடாக வந்துள்ள இந்த நாவல் மிக பெரிய அளவில் பேசப்படுகின்றது.

இலங்கைத் தமிழரான அ.முத்துலிங்கம் தனது ஐ.நா சேவையை முடித்து ஓய்வு பெற்று தற்போது கனடாவில் வாழ்கின்றார். ஆனால் உண்மையில் அவர் ஓய்வு பெறவே இல்லை. கனடாவில் அவர் முழு நேர எழுத்தாளராக பணியாற்றுகின்றார். கனடா, இந்தியா, இலங்கை, மற்றும் இணையத்தளங்கள் எல்லாம் இவருடைய எழுத்துகளை நான் முந்தி, நீ முந்தி என்று பிரசுரித்துக் கொண்டுள்ளன.

இலங்கைத் தமிழர்களின் துயரங்கள் பற்றியும், அவர்களுடை அரசியல் அதிகாரங்கள் பற்றியும் அதிக அக்கறை கொண்ட ஒரு மனிதர் இவர். தனது கட்டுரைகள், பேட்டிகளில் இது குறித்து மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

இவருடைய உண்மை கலந்த நாட்குறிப்பில் இருந்து ஒரு பகுதி விளம்பரம் வாசகர்களுக்காக பிரசுரமாகின்றது.

தமிழில் சுயசரிதைத் தன்மை கொண்ட புனைவுகளில் தன்னிரக்கமும் படைப்பூக்கமற்ற வெற்று தகவல்களும் பொது இயல்பாகிவிட்ட சூழலில் அ.முத்துலிங்கத்தின் இந்த நாவல் அந்த வகை எழுத்திற்கு ஒரு புதிய உத்வேகத்தையும் அழகியலையும் வழங்குகிறது.

முத்துலிங்கத்தின் கவனம் பெறும் ஒவ்வொரு அனுபவமும் உயிர்ச் சித்திரங்களாக விழித்தெழுகிறது. எந்த ஒரு சிறிய நிகழ்வையும் நினைவையும் ஒரு மர்மமான ரசவாதத்தால் வாழ்வின் தரிசனமாக மாற்றிவிடும் அவர் நவீனத் தமிழ் எழுத்திற்கு ஒரு புதிய நீரோட்டத்தை வழங்குகிறார். இந்த நாவலின் சில பகுதிகள் தனி ஆக்கங்களாக வெளிவந்திருந்தபோதும் இந்த வடிவத்தில் அவை தமது உள்ளிணைப்புகளால் ஆழ்ந்த ஓர்மையை வெளிப்படுத்துகின்றன. அவரது புனைவின் நிழல் எதார்த்தத்தை மறைப்பதில்லை. மாறாக அவற்றை அதன் மந்தகதியிலிருந்து விடுவித்து பிரகாசமடைய வைக்கிறது.









24 Hours Guaraanteed Results

# Mother Siddhi

3 Reading $20

## Find the answer to your unsolved problems. Don't suffer in silence

உண்மையான ஆன்மீக பரிகாரி - 20 வருட அனுபவம் கொண்டவர் (Genuine spiritual healer)

## Psychic Clairvoyant Medium

**Genuine Spiritual Healer**
**Marabout of International Fame- 20 year's Experience**
**A Great Healer in Natural Medicine.**
**Born Gifted with Spiritual Power**

- No matter what your problems are, I can help you solve them by using holy spirit and the most powerful spell.
- Love/relationship problems, family problems. marriage (reunion or separation),
- Parents having difficulties with children, health problems, court cases or immigration.
- To have good success in exam, job or business, infertility or sterility and sexual problems.
- If you are suffering from unknown illness and pain inside your body, I can remove it within few days.
- Cure your alcoholism, drug addiction & energy weakness.
- I will protect you from all enemies and any bad obstacles that are blocking your success.
- If spouse walk out of your life, I can reunite and give love and fertility between you for ever and help find the right lover and success.

## தனிமையில் வாடாதீகள்.

பிரச்சினை எதுவானாலும் தீர்வுகாணலாம்.
(புனித ஆவி மற்றும் மந்திர வலிமையுடன்)

- புனித ஆவியின் துணையுடன் உங்கள் பிரச்சினை எதுவாயிருந்தாலும் தீர்வுகாண என்னால் உதவ முடியும்.
- காதலில் தோல்வியா? குடும்ப உறவில் விரிசலா? திருமண முறிவா? பாலியலில் பிரச்சினையா? அதில் நாட்டமின்மையா? தீர்த்துவைக்க முடியும்.
- சேய்களுடன் பெற்றோர்க்கு பிரச்சினையா?
- குடிவரவு அல்லது வழக்கில் பின்னடைவா?
- ஆரோக்கிய நலிவா?
- பரீட்சையில், வியாபாரத்தில், உத்தியோகத்தில் ஏற்றம் காணவேண்டுமா?
- குடி அல்லது போதை பழக்கத்திலிருந்து மீள வேண்டுமா?
- நிர்ணயம் செய்ய முடியாத நோயா?
- புரியாத உடல் வலியா உடல் வலிமையின்மையா?
- பகைவர்களிடமிருந்தும், வெற்றியை பாதையில் உள்ள தடைகளை நீக்கி பாதுகாப்பு அளிக்க என்னால் இயலும்.
- வாழ்க்கை துணை பிரிந்து போயிருந்தால் புதிய காதல் வாழ்வு ஆரம்பிக்கும் வகையில் மீளவும் சேர்த்து வைக்க முடியும்.
- இயற்கை வைத்தியத்தில் கைதேர்ந்தவர்.

- **ஆன்மீக சக்தியுடன் கூடவே பிறந்தவர்**
- **இயற்கை வைத்தியத்தில் கைதேர்ந்தவர்**



***Palm, Tarot Card, Crystal Ball Reading Advisor. Tells the past, present & future. I can succeed where others have failed***

**Call : 416-283-1088**
**8871 Sheppard Ave.**
**East at morningside**
**You can see me by appointment only**



# பொறுமையின் இரகசியம்

## ஓடும் நீர் உறைவதில்லை 81

பொறுத்தார் பூமி ஆள்வார், பொறுமை கடலிலும் பெரிது, பொறுமைக்கு உதாரணம் பூமித்தாய் என்று பொறுமையின் சிறப்புத்தன்மையை நாம் பல்வேறு வழிகளில் வெளிப்படுத்துகின்றோம். பொறுமை ஒரு மனிதனது சிறப்புத்தன்மையின் வெளிப்பாடு. பொறுமையுள்ளவர்கள் போற்றப்படுபவர்களாகவும், மற்றவர்களால் மதிக்கத்தக்கவர்களாகவும் காணப்படுகிறார்கள். இந்தப் பொறுமையின் சிறப்பு என்ன என்பதையும் இந்தப் பொறுமையின் இரகசியம் என்ன என்பதையும் சிறிது விரிவாக விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பொறுமை என்பது ஒருவரது அமைதியான குணஇயல்பின் வெளிப்பாடு என நாம் பொருள் கொள்வதுண்டு. அமைதி எனும்போது ஒரு விடயத்தை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் காலம் பற்றியதாக அமைகின்றது. அவசரப்பட்டு அல்லது உணர்ச்சிவசப்பட்டு எடுத்த காரியத்தை அல்லது எதிர்பார்த்த விடயத்தை இடைநடுவில் தவறவிடாது அமைதியாக முன்னெடுத்துச் செல்லும் மனஇயல்பு எனப்படுகின்றது. பதற்றப் பட்டு பாதிவழியில் நின்று பரிதாபப்படுவதைத் தவிர்ப்பதற்கு இந்தப்பொறுமை அவசியமாகின் றது. பொறுமையின் பெறுபேறுகள் எப்பொழுதும் நமக்குச் சாதகமானவையாக அமைவது இயற்கையின் மிகப்பெரிய கொடையாகும்.

பொறுமைக்கு எதிரானது பொறாமை எனக் கூறுவதும் உண்டு. இங்கே பொறாமை என்பது அழுக்கு நிறைந்த மனோபாவத்தை மட்டும் குறிப்பிடுவதல்ல. பொறுமையின்மை என்ற பொருளையும் கொண்டது. அதாவது பொறுமை இல்லாத தன்மை பொறாமை எனப்படுகின்றது. எனவே பொறாமை என்பது பயன்படுத்தப்படும் சந்தர்ப்பத்தைப் பொறுத்து அதன் பொருள் வேறுபடுகின்றது. பொறாமை என்பது பொறுத்துக்கொள்ள முடியாமை என்பதாகும். இந்தப் பொறுத்துக் கொள்ளமுடியாமை ஒரு செயற்பாட்டுடன் தொடர்புபடுத்தப்பட்டு அதனை அவசரப்பட்டு குழப்பிவிடுதல் என்ற பொருளிலும் மனோபாவரீதியாக ஒருவரது முன்னேற்றத்தை, வெற்றியை, புகழை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளமுடியாமல் தன்னால் அந்த நிலைமை அடையமுடியவில்லை என்ற மனவிரக்தியின் வெளிப்பாடாகவும் காணப்படுகின்றது. மனோபாவ ரீதியான பொறாமைக்கு அடிப்படை தாழ்வு மனப்பான்மையாகும்.

பொறாமை என்பது இருவடிவங்களில் அமைந்துள்ளதைப் பார்த்தோம். இந்த இரண்டுவகையான பொறாமைக்கும் சாதகமான விளைவைத் தரவல்லது பொறுமை மட்டும்தான். ஏனெனில் பொறுமையிடம் இருப்பது ஒரே ஒரு இரகசியம் தான். இந்த இரகசியத்தை நாம் புரிந்து கொள்வோமாயின் வாழ்வியலில் நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு முயற்சியும் வெற்றியானதாகவும் எமக்குச் சாதகமானதாகவும் அமையும் என்பதில் சிறிதளவும் கூட சந்தேகப்படத் தேவையில்லை. ஏனெனில் பொறுமையின் சிறப்புக்கு நிகராக எதுவுமில்லை. ஏனெனில் நம்மால் பொறுமை காக்கப்பட்ட சகல விடயங்களும் நாம் எதிர்பார்த்திராத அளவுக்குச் சிறப்பையும் பெருமையையும் தருகின்றன என்பதை நாம் இனங்கண்டு கொள்வதன் மூலம் பொறுமையின் மகத்துவம் வெளிப்படுகின்றது.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் வாரம் தோறும் திங்கட்கிழமைகளில் இரவு 9.30 மணிக்கு கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

*நன்றியுடன் KG Master*

ஒருவர் பொறுமையுள்ளவராக இருப்பதற்கு எதையும் தாங்கும் மனப்பக்குவம் உள்ளவராக இருத்தல் வேண்டும் என நாம் நடைமுறையில் கூறிக்கொள்கிறோம். இங்கே ஒருவர் எதையும் தாங்கும் இதயத்தைக் கொண்டிருப்பின் பொறுமை காக்கப்பட்ட விடயத்தின் சாதகமான அல்லது எதிர்பாராத விளைவுகள் பற்றிய தாக்கங்கள் அர்த்தமற்றதாகி விடுகின்றன. ஏனெனில் பொறுமையின் எதிர்பார்ப்பானது சாதகமான பெறுபேறுகளைப் பெறவேண்டும் என்பதாக மட்டுமே அமைகின்றது. நேர்த்தியான எதிர்பார்ப்புக்களைச் சார்ந்த நடவடிக்கைகள் அனைத்தும் பொறுமையினால் நமக்குச் சாதகமான விளைவுகளை பெற்றுத் தருகின்றன என்ற அடிப்படை உண்மையை நாம் அறிந்து கொள்ளல் வேண்டும்.

**KG Master-kgmaster@rogers.com**

பொறுமை என்பது நமது கோபத்தை அல்லது வெறுப்பை அடக்கி அமைதியாக இருத்தல் எனவும் பலர் கருதுகிறார்கள். இருவருக்கிடையில் ஏற்படும் வாக்குவாதத்தால், ஏற்படக்கூடிய பாதக-மான விளைவுகளைத் தவிர்த்துக் கொள்வதற்காக ஒருவர் அத்தனை பாதகமான பழிச் சொற்களையோ அல்லது சுடும் சொற்களையோ பல்லைக் கடித்துக் கொண்டு எந்தவித எதிர்ப்பும், மறுப்பும் காட்டாமல் தனக்குள்ளேயே அடக்கிக் கொள்வது எனவும் பொறுமைக்கு விளக்கம் கொடுக்கப்படுகிறது. இவ்வாறான செயற்பாடுகள் பொறுமையல்ல. உள்ளே குமுறிக் கொண்டிருக்கும் எரிமலை போன்றது தான் இது. எப்போதாவது வெடிக்கும் போது இதுவரை தன்னகத்தே வைத்திருந்த அத்தனை கோபம், வெறுப்பு என்பன அடுக்கடுக்காக முன்வைக்கப்பட்டு இரண்டில் ஒன்று என்ற முடிவுக்கும் தங்களை முன்னெடுத்துச் செய்வார்கள். எனவே உடனுக்குடன் சுமுகமான முறையில் தீர்த்து வைக்கக் கூடிய விடயங்களைப் சேர்த்து வைப்பது பொறுமை எனப் பொருள் கொள்ளக்கூடாது.

பொறுமையின் சிறப்பு என்னவெனில் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட விடயத்தை எந்தவிதமான ஏற்றத்தாழ்வோ அல்லது பக்கச் சார்போ இன்றி நெறிப்படுத்திப் புதியதொரு வடிவத்தைக் கொடுப்பதாகும். இந்தப் புதிய வடிவமானது நாம் முற்றிலும் எதிர்பாராத அளவுக்குக் கூட சிறப்பாக அமைவதும் உண்டு. இதனால் தான் பொறுமையின் விளைவு என்பது முற்றிலும் அதிசயிக்கத் தக்கவகையில் அமைந்து விடுகின்றது. இப்படிப்பட்ட விளைவுகள் பறறிய சில உதாரணங்களை நாம் ஆராய்வோம்.

முதலில் ஒரு குடும்ப அமைப்பை எடுத்துக் கொள்வோம். ஒரு ஆணும், பெண்ணும் கணவன் - மனைவி என்ற நட்புக்குள் இணைக்கப்பட்டதும் உருவாக்கப்படும் குடும்பம் ஆரம்பகாலங்களில் முற்றிலும் எதிர்பாராத வகையில் இணக்கும் பிணக்குமாக நகர்கின்றது. திருமணமாகி ஒருசில மாதங்களின் பின்னர் இருவருக்கும் இடையில் பல கருத்து முரண்பாடுகளும், எதிர்ப்புக்களும் போட்டிகளும் வாக்குவாதங்களும் எனப் பலவிடயங்கள் ஒரு நிச்சயத்தன்மையற்ற நட்பு முறையின் வெளிப்பாடாக அமைகின்றன. ஆனால் திருமணமான ஆரம்பகாலங்களில் ஏற்படும் இவ்வாறான பிரச்சினைகளை ஒருவாறு சமாளித்துக் கொண்டு ஒரு குறிப்பிட்ட வருடங்களை நகர்த்துபவர்கள் காலப்போக்கில் புதிய வழிமுறைகளும் வாய்ப்புக்களும் தரப்படுபவர்களாக முன்னரைவிடச் சுமுகமான முறையில் குடும்பத்தை நடாத்துவதற்கு முடிகின்றது. இதற்கும் பின்னர் இன்னும் சில காலங்களின் பிற்பாடு கணவன் - மனைவி என்ற நட்பின் உண்மைத் தன்மையை உணர்ந்து ஒருவருக்காக மற்றவர் வாழ்தல் என்ற நிலைக்கு மாறிவிடுகிறார்கள். இதற்குக் காரணமாக அமைவது ஒரேயொரு விடயம் தான். அதுதான் பொறுமையின் இரகசியம்.

குழந்தைகள் வளர்ந்துவரும்போது ஆரம்பகாலங்களில் எம்மை மகிழ்ச்சியின் உச்சநிலைக்குக் கொண்டு செல்வார்கள். மிகவும் அன்பாகவும், நமது சொற்களுக்கு உயர்ந்த மதிப்புக் கொடுப்பவர்களாகவும், இறைவனுக்கு அடுத்து நாம்தான் அவர்கள் வாழ்க்கையில் முக்கியம் எனவும் கருதுவார்கள். சில குழந்தைகள் பெற்றோர்களுக்கு இறைவனை விட முக்கியத்துவம் கொடுப்பார்கள். படிப்படியாக வளர்ந்துவரும்போது வெளிப்புறச் செல்வாக்குகள் காரணமாக அவர்களது நடத்தைகள், எண்ணங்கள் மாற்றங்களுக்குள்ளாகின்றன. எமது குழந்தைகள் இந்த உச்சத்தின் தலைசிறந்த குழந்தைகள் எனப் பறைதட்டி புகழ் பாடிய நாம் இப்போது அவர்களது நடவடிக்கைகளைத் தாங்கமுடியாமல் அதாவது மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் பரிதவிக்கின்றோம். குழந்தைகளின் விடலைப்பருவங்களில் ஏற்படும் உடலியல் உளவியல் மாற்றங்கள் அவ்வாறான தன்மைகளை முன்னிறுத்துவதை எம்மால் சகித்துக்கொள்ள முடியாது அல்லற்படுகிறோம். இக்கால கட்டங்களில் சிலர் குழந்தைகளின் உறவையே துண்டிக்கவும் முயல்கிறார்கள். பலர் ஏதோ ஒருவகையில் சமாளித்துக் கொண்டு வாழ்க்கையை நகர்த்துகிறார்கள். ஆனால் அதி பெரும்பான்மையான குழந்தைகள் - ஏறத்தாழ தொண்ணூற்றியெட்டு விழுக்காடான குழந்தைகள் - முதிர்ச்சி நிலையை அடைவதன் மூலம் நாமே எதிர்பாராத வகையில் அது சிறந்த பக்குவம் உடையவர்களாகவும் சிறந்த பண்டிதர்களைக் கொண்டவர்களாகவும் பொறுப்புள்ளவர்களாகவும் மாறி நாம் அவர்கள் குழந்தைகளாக இருந்த போது என்னென்ன கனவுகளை கண்டோமோ அவற்றுக்கும் அவற்றுக்கு மேலாகவும் சிறந்தவர்களாக மாறிவிடுகிறார்கள். இதற்குக் காரணம் பொறுமையின் அந்த இரகசியம் தான்.

உலகவரலாற்றில் சிறந்த வெற்றியாளர்கள் எனக் கருதப்படுபவர்கள், கண்டுபிடிப்பாளர்கள் சுதந்திரப்போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எனப்படுபவர்கள் அனைவரும் பல்வேறு இடர்களையும், தடைகளையும் தாண்டியவர்களே. ஒரு குறிக்கோளை முன்னிறுத்தித் தமது முயற்சிகளை முன் நகர்த்தும் போது ஏற்படும் எந்த இடரும் அவர்களைப் பாதிப்பதுமில்லை, பயப்படுத்துவதுமில்லை. இவர்கள் தமது கருமத்தில் தான் கண்ணாக இருப்பார்களேயன்றி அதன் பெறுபேறுகளில் அக்கறையற்றவர்கள். அதாவது தமது இலக்கை அடைவதே இவர்களது வாழ்வியல் நகர்வாக அமையும். பல தொழில் அதிபர்கள் பல்வேறு இடர்களைச் சந்தித்த போதும் இறுதியில் வெற்றியாளர்களாத் தம்மை நிரூபித்துள்ளார்கள். இவ்வாறு இவர்கள் வெற்றிக்கு அடித்தளமாக அமைந்ததும் இந்தப் பொறுமையின் இரகசியம் தான்.

இப்போது ஓரளவுக்கு பொறுமையின் இரகசியம் என்ன என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இருப்பினும் அதன் விளக்கத்தைத் தருவது முக்கியமல்லவா. பொறுமையின் இரகசியம் 'காலம்' (Time) என்பது தான். இந்த உலகில் காலம் எனும் சக்கரத்துக்குள் அகப்பட்டு மாற்றமடையாதது எதுவுமே இல்லை. சுழன்று கொண்டிருக்கும் காலத்தின் சக்கரங்களுக்குள் அகப்படும் அனைத்தும் மாற்றத்தின் வெளிப்பாடுகளாக அமைகின்றன. ஒவ்வொரு கணப்பொழுதும் காலத்தின் செல்வாக்கை எம்மீது செலுத்தப்படுகின்றது. இந்தத் தாக்கத்தின் மூலமான மாற்றங்கள் உடலியல், உளவியல் சார்ந்ததாக அமைவதும் தவிர்க்கமுடியாதது. இந்தத் தாக்கங்களின் விளைவே நாம் நேற்று கண்டவைகளும் இன்று காண்பவைகளும், நாளை காணப்படப்போபவைகளும் ஒரே மாதிரியானதாக அமைவதில்லை. நமது அனுபவமும் அதன் மூலமான நமது பார்வைகளும் அந்த மாற்றங்களின் விளைவுகளாகும். அதாவது ஒரு விடயத்தின் அல்லது முயற்சியின் சிறப்பு என்பது நமது மாற்றத்திலும் காலத்தின் செல்வாக்கு உட்படும் அந்த முயற்சி சம்பந்தமான விடயங்களின் மாற்றங்களும் இணைந்தவையாகும். இன்னொரு வகையில் கூறுவதாயின் மாற்றங்கள் அனைத்தும் காலம் என்ற காரணியின் வெளிப்பாடாகும். இதனால்தான் பொறுமை என்பது காலத்தின் கையில் ஒப்படைத்தல் எனப்படுகின்றது.

குடும்பமாக இருந்தாலும்சரி, குழந்தை வளர்ப்பாக இருந்தாலும்சரி, தொழில் முயற்சியாக இருந்தாலும் சரி, சுயமுன்னேற்றமாக இருந்தாலும் சரி நமது எதிர்பார்ப்புக்களை நேர்த்தியானதாக அமைத்துக் கொண்டு காலத்தின் கரங்களில் ஒப்படைத்துவிட்டு நமது நாளாந்த நடைமுறைக-ளை வழமைபோல் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். காலத்தின் கரங்களில் ஒப்படைத்து விட்டு அதற்கான ஒரு கால அளவை நாம் வரையறுத்தலாகாது. ஏனெனில் காலம் நமக்குச் சார்பாகக் கனியும் என்பது காலத்தின் வெளிப்பாடே யன்றி நமது கணிப்பீடாக அமைவதில்லை.

**ஆம் வாசகர்களே!**

பொறுமையின் இரகசியம் காலம் என்பதாகும். கடந்தகாலங்களிலோ அல்லது நிகழ்காலத்திலோ ஏற்பட்டுள்ள பாதகமான விடயங்களைக் காலத்தின் கையில் ஒப்படைப்பதும் அது தானாகக் கனியும் வரை காத்திருப்பதும் பொறுமைக்கான இலக்கணமாகும். இந்த இலக்கணம் அற்றவர்கள் தானாகக் கனியும் முன்னர் தடியால் அடித்துக் கனியவைக்க முயற்சித்துத் தோல்வி கண்டு விடுகிறார்கள். பொறுமையின் இரகசியம் காலம் என்பதை மறந்துவிடாதீர்கள். எதற்கும் ஒரு காலம் உண்டு என்பது பொறுமைக்கான விளக்கம். எனவே நேர்த்தியான எதிர்பார்ப்புக்களும் வாழ்வியல் நடைமுறைகளும் கொண்ட ஒவ்வொருவரது வாழ்க்கையும் நிறைவாக அமைவதற்கு அடிப்படையாக அமைவது இந்தப் பொறுமையின இரகசியமான காலம் தான். எனவே விடைகாண இயலாத விளக்கமற்றுத் தடுமாறவைக்கின்ற எதிர்பார்ப்புக்கு மாறான என எவையாக இருந்தாலும் காலத்தின் கையில் ஒப்படைத்துவிட்டு நமது நாளாந்த வாழ்க்கையைச் சிறப்புடனும் மகிழ்ச்சியுடனும் நகர்த்துவோம். நிச்சயமாக காலத்திடம் ஒப்படைக்கப்பட்ட விடயங்கள் நன்றாகக்கனிந்து நாம் வாழும் காலத்தில் நம்மிடம் தரப்படும். உறுதியாக நம்புங்கள்.


**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

**1-877-707-3223 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**

**மஹாராஜியின் உரைகள்**



**On DVD**

இலவச DVDக்கு அழையுங்கள்

**(416) 431-5000**

**1 877 707 3223**

**On TV**

**Saturdays at 10:30 am**

**Rogers Cable Channel - 20**

**Bell Express vu Channel - 219**

# நினைவுகள்: மஞ்சேரி நாராயண் நம்பியார்

## மஹா குருசாமி ( 1919 - 2009)

- பிலிம்நியூஸ் கிருஸ்ணன் -

தமிழ் திரையுலகில் ‘வில்லன்’ பாத்திரத்தில் தனி முத்திரை பதித்த பழம்பெரும் நடிகரான எம்.என்.நம்பியார், தனது 89ஆவது வயதில் சமீபத்தில் காலமானார். தமிழ் சினிமாவில் அழுத்தமான தடம் பதித்த நடிகர்களில் ஒருவர், நம்பியார். இவர் கையை பிசைந்துகொண்டு, கழுத்தை சிறுத்து, கட்டை குரலில் கதாநாயகியை மிரட்டும் காட்சி, நம்பியார் காலத்துக்குப் பிறகும் தமிழ் சினிமாவில் மிமிக்ரி செய்யப்பட்டது நம் எல்லோருக்கும் தெரியும். அந்த அளவுக்கு பிரபலமான காட்சி, தமிழ் சினிமாவில் வேறு எதாவது இருக்குமா என்பது சந்தேகம்தான். எம்.ஜி.ஆர். - சிவாஜி என்ற இரண்டு பெரும் நடிகர்களுக்கு இறுதிவரை ஈடுகொடுத்த ஒரே வில்லன்! தமிழில் 1000 படங்களுக்கு மேல் நடித்துள்ள அபூர்வமான நடிகர்களில் ஒருவர். நம்பியாரின் இழப்பு நிச்சயம் தமிழ் திரையுலகுக்கு பேரிழப்புதான்.

1919ஆம் ஆண்டு மார்ச் 17ஆம் தேதி கேரளா மாநிலம் கண்ணூர் மாவட்டத்தில் மஞ்சேரியில் பிறந்தவர், நம்பியார். மஞ்சேரி நாராயண் நம்பியார் என்பதைத்தான் சுருக்கமாக எம்.என்.நம்பியார் என்று வைத்துக்கொண்டார். கேளு நம்பியார் என்பது இவரது தந்தை பெயர். நம்பியாரின் எட்டாவது வயதில் தந்தை இறக்கவே, தன் தமையனார் வசித்து வந்த உதகமண்டலத்துக்குக் குடி பெயர்ந்து அங்குள்ள நகராட்சி உயர் பள்ளியில் மூன்றாம் தரம் வரை படித்தார். தொடர்ந்து படிக்க அவரது பொருளாதாரம் இடம் கொடாமையால், தனது 13 வயதிலேயே சென்னை நவாப் ராசமாணிக்கம் நாடகக் குழுவில் சமையலறையில் உதவியாளராக சேர்ந்து சேலம், மைசூர் எனச் சுற்றினார். ஆனாலும், நாடகங்களில் நடிக்க சந்தர்ப்பம் வரவில்லை. நவாப் கம்பனியின் ‘ராம்தாஸ்’ என்ற நாடகத்தை 1935ஆம் ஆண்டு ‘பக்த ராம்தாசு’ என்ற பெயரில் திரைப்படமாக எடுத்தார்கள். இப்படத்தில் அக்கண்ணா, மாதண்ணா என்ற நகைச்சுவை வேடங்களில் மாதண்ணா வேடத்தில் நம்பியார் நடித்தார். இதுவே இவர் நடித்த முதல் திரைப்படம். இப்படத்தில் நடித்ததற்காக நம்பியாருக்கு சம்பளமாக நாற்பது ரூபாய் கொடுக்கப்பட்டது.

1944இல் நவாப்பின் குழுவில் இருந்து விலகி டி.கே.கிருஷ்ணசாமியின் நாடகக் குழுவில் சேர்ந்து எஸ்.டி.சுந்தரம் எழுதிய ‘கவியின் கனவு’ நாடகத்தில் ராஜகுருவாக நடித்தார் நம்பியார். இதனையடுத்து ஜூபிட்டர் பிக்சர்சின் நான்கு படங்களுக்கு நம்பியார் ஒப்பந்தம் செய்யப்பட்டார். ‘வித்யாபதி’ (1946), ‘ராஜகுமாரி’ ஆகியவற்றில் நகைச்சுவை வேடங்களில் நடித்தார். ‘கஞ்சன்’ (1947) என்ற படத்தில் கதாநாயகன் வேடம் கிடைத்தது. தொடர்ந்து ‘அபிமன்யு’, ‘மோகினி’ போன்ற படங்களிலும் நடித்தார். அறிஞர் அண்ணாவின் ‘வேலைக்காரி’ படத்தில் கதாநாயகன் மூர்த்தியாக நடித்து பெயர் பெற்றார். அதன் பின்னர் தொடர்ந்து பல படங்களில் வில்லன் பாத்திரங்களில் நடித்துப் புகழ்பெற்றார். அதன்பிறகு, கிட்டத்தட்ட 60 ஆண்டுகளுக்கும் மேல், தொடர்ச்சியாக தமிழ் திரைத்துறையின் தலைசிறந்த நடிகர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். அக்காலத்தில் திரைத்துறையின் ஸ்டார்களாகத் திகழ்ந்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., நடிகர் திலகம் சிவாஜி கணேசன் இருவரது படங்களிலுமே நிரந்தர வில்லன் நடிகராக இடம் பெற்றிருந்தவர் நம்பியார்தான். ஜெமினிகணேசனுடனும் பல வெற்றிப் படங்களில் நடித்துள்ளார். ‘திகம்பரசாமியார்’ எனும் வெற்றிப் படத்தில் 11 வேடங்களில் நடித்து சாதனை செய்தவர் என்பது நம்பியார் பற்றி பலருக்கும் தெரியாத தகவல்களில் ஒன்று. இந்தப் படத்தில் இடம்பெற்ற நம்பியாரின் போலிச் சாமியார் வேடம் அந்தக் காலகட்டத்தில் பரபரப்பாகப் பேசப்பட்டது.



எம்.ஜி.ஆர். - நம்பியார் கத்திச் சண்டை இன்றளவும் ரசிகர்களிடையே கைதட்டல்களை பெற்றுக் கொண்டிருக்கும் பழைய திரைப்பட காட்சிகளில் ஒன்று. ‘வேலைக்காரி’ படத்தில் எம்.ஜி.ஆரும் இவரும் வாள் சண்டை போடும்போது, எம்.ஜி.ஆரின் வாள்முனை நம்பியாரின் தலையில் காயம் ஏற்படுத்தி விட்டதாம். மறுநாள் நடந்த சண்டைக் காட்சியில், தனக்கு காயம் ஏற்படுத்தியதை போலவே எம்.ஜி.ஆரின் தலையில் காயத்தை ஏற்படுத்தினாராம் நம்பியார். இதையடுத்து இனிமேல் வாள் சண்டையில் போது, வாள் முனையில் ஒரு குண்டு வைத்து முனையை மழுங்க செய்யவேண்டும் என்று நடைமுறையையே மாற்றியிருக்கிறார்கள். திரைப்படங்களில் கதாநாயகன் - வில்லன் என எதிரும் புதிருமாக காட்சியளித்தாலும், உண்மையில் எம்.ஜி.ஆரும் நம்பியாரும் நெருங்கிய நண்பர்கள். எம்.ஜி.ஆருக்கும் தனக்கும் இடையேயான நட்பு பற்றி நம்பியாரே ஒருமுறை குறிப்பிட்டார்: “எனக்கு எம்.ஜி.ஆர். மேல் ரொம்பக் கோபம். அவர் இருந்த வரைக்கும் எங்கே போனாலும் எம்.ஜி.ஆர். என்றதும் உடனே மக்கள் நம்பியார் என்றும் சேர்த்தே உச்சரிப்பார்கள். இப்போ அவர் போய்ட்டாரு. மக்கள் என்னை மறந்துட்டாங்க. போகும்போது என்னையும் கூட்டிட்டுப் போயிருக்கலாம் அவர்” என்று சொல்லிவிட்டு, அந்த மேடையிலேயே கண் கலங்கினார் நம்பியார்.



1980களில், பிரபல வில்லன் என்ற நிலையிலிருந்து நம்பியாரை குணச்சித்திர நடிகராக மாற்றியவர் கே.பாக்யராஜ். ‘தூறல் நின்னு போச்சு’ படத்தில் நம்பியாரை செண்டிமெண்டும் காமெடியும் கலந்த பாத்திரத்தில் நடிக்க வைத்தார். அதன்பிறகு, ரஜினிகாந்தின் பெரும்பாலான படங்களில் முக்கிய வேடத்தில் நடித்துள்ளார் நம்பியார். கடைசியாக ரஜினியுடன் ‘பாபா’ படத்தில் நடித்தார். நம்பியார் நடித்த கடைசி படம் விஜய்காந்தின் ‘சுதேசி’. தமிழ் தவிர தெலுங்கு, மலையாளம், ஹிந்தி ஆகிய மொழி படங்களிலும் நம்பியார் நடித்துள்ளார். ‘ஜங்கிள்’ என்ற ஆங்கிலத்தில் திரைப்படத்தில் 1952ஆம் ஆண்டு நடித்தார்.

திரையில் வில்லனாக தோன்றிய நம்பியார், நிஜ வாழ்க்கையில் எந்த தீய பழக்கமும் இல்லாத கடவுள் பக்தி மிக்க மனிதராகவே வாழ்ந்தார். சினிமா ரசிகர்களுக்கு நம்பியார் என்ற பெயர் உருவாக்கும் ஏழைகளின் விரோதி, காமுகன், பணத்தாசை பிடித்தவர் என்னும் மாய பிம்பங்களுக்கு நேரெதிரான வாழ்க்கையை இறுதிவரை கடைப்பிடித்தவர் என்பது அழகான முரண்பாடு.

நடிப்புக்கு அடுத்ததாக எம்.என்.நம்பியாரின் புகழாக சொல்லப்படுபவற்றில் முக்கியமானது அவரது தீவிர ஐயப்ப பக்தி. 65 முறைகளுக்கு மேல் சபரிமலைக்கு மாலை போட்டு சென்றுள்ளார். இதனால் அவர் மஹா குருசாமி என அழைக்கப்பட்டார். ரஜினிகாந்த், அமிதாப்பச்சன் உள்பட பல இந்திய சினிமா நட்சத்திரங்கள் நம்பியாரை குருசாமியாக ஏற்று அவரோடு சபரிமலைக்குச் சென்றிருக்கிறார்கள். தனது ஆன்மீக செயல்பாட்டை பொது வாழ்வில் அதிகாரத்தை கைப்பற்றும் ஆயுதமாக

தொடர்ச்சி 18ஆம் பக்கம்




GSF
Golden Store Fixtures
Friend for your Business
sales@goldenstorefixtures.com
GRAND
Opening On April
Metal Shelving
GRID PANEL HOOKS
Showcases
Shopping Carts & Baskets
Slatwall Hooks
SIGNS
Grid Panel
Acrylic Podiums
Slatwall Displays
Cosmetic Displays
Glass Displays
Free Estimate & Free Delivery(Over $100 purchase)
355 Admiral Blvd. Unit# 5
Mississauga, ON, L5T 2N1
We have two locations to serve you better
#202-5215 Finch Av, E
Scarborough, ON
(GTA SQUARE MALL)
Tel: 416 627 4335
Web:www.goldenstorefixtures.com
Tel: 416 286 0333

# "ஏன் கலைஞர் தயங்குகிறார்?"

## நேர்காணல் - ஆர். சுந்தராஜன்

கொழும்பு Bishops கல்லூரி கலையரங்கில் கடந்த ஜனவரி 31ஆம் திகதி மறைந்த கலாநிதி நீலன் திருச்செல்வத்தின் 65வது பிறந்ததின ஞாபகார்த்த விழாவில் பாரம்பரிய இலங்கை நடனங்களுடன் தென்னிந்திய மத்திய மாநில அரச அனுசரணையுடன் புரிசை துரைசாமி கண்ணப்ப தம்பிரான் பரம்பரை தெருக்கூத்து மன்றத்தினரின் திரௌபதி துகிலுரிதல் எனும் தெருக்கூத்தை கண்டுகளிக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. பாரம்பரிய கூத்து உடை அலங்காரங்களுடன், துரிதகதி துள்ளல் ஜதிகளுடன் ஆரம்பித்த இக்கூத்தின் விறுவிறுப்பு கடைசிவரை குறையவே இல்லை. கூத்து மரபுப்படி ஆண்கள் மட்டுமே பங்கேற்கும் இக்கூத்தில் திரௌபதியாக ஆடிய இளைஞனின் தோற்றம் அவர் ஆணா பெண்ணா என வியக்க வைத்தது. இந்த மன்றத்து அநுபவமிக்க இசைக் கலைஞர்கள், தமது இலாவகமான வாசிப்பினால் உன்னத இசையை எழுப்பினார்கள். ஒலிபெருக்கியில் சத்தம் கூடி காது செவிடுபட வைத்தாலும், இசை வழங்கியவர்களும், ஆடிப் பாடியவர்களும் தமது பங்கைக் சிறப்புற நிறைவேற்றினர். ஒலி சற்றுக் குறைந்திருந்தால் மேலும் சிறப்பாயிருந்திருக்கும். உரத்த ஒலியுடன் தான் சங்கீதம் கேட்க வேண்டும் எனும் தவறான நம்பிக்கையினால் சகல கலைநிகழ்ச்சிகளிலும் எமது காது செவிடுபடுவது கண்கூடு. இங்கித மான இசையை அளவான ஒலியுடன் கேட்டு அனுபவிக்க எமது இளஞ்சமுதாயத்தினர் ஒத்துழைக்க வேண்டும் என்பது எனது வேண்டுகோள்.

இதை எழுதும் போது 1940 களில் கலைப்பிரியரான எனது அப்பா, அரியாலையில் கூத்துப் பழகுவதைப் பார்க்க என்னை கூட்டிச் சென்றது ஞாபகத்திற்கு வருகின்றது. கனடாவில் கடந்த 15 வருடங்களாக கலைஞர் கோணேசின் ITR ஒலிபரப்பில் இணைந்திருக்கும் எனக்கு தமிழ் கனேடிய வானொலிகளில் நாட்டுக்கூத்தை பற்றி மிகக் குறைவாகவே நிகழ்ச்சிகள் நடந்திருப்பது நினைவு வருகின்றது. கனடாவில் இப்போது தென்மோடித்திலகம் அண்ணாவியார் சூசைப்பிள்ளை அந்தோனிமுத்து, Dr. Figurado, வழக்கறிஞர் மனுவல் ஜேசுதாசன், காலம் செல்வம், அன்ரன் பீலிக்ஸ், திவ்வியராஜன், தேவகாந்தன் போன்ற இன்னும் சிலர் நாட்டுக்கூத்தை போஷித்து வருவது சிறப்பு. 2005 ஆம் ஆண்டு கிரியா யோக யோகி சத்யம் அவர்களின் அலகபாத் ஆசிரமத்தில் இரண்டு மாதம் தங்கியிருக்கையில், அவர் அலகாபாத் சர்வகலாசாலை மாணவர்கள் நடத்திய ஹிந்தி


*மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214*



**லலிதா புரூடி**


தொடர்ச்சி 28ஆம் பக்கம்




SMILE....

• BUSINESS PLANS
• CORPORATE TAX PREPARATION OF FILING
• PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
• ACCOUNTING, TAXATION
• SYSTEMS - POINT OF SALES

**RK CONSULTANTS**

PL. CALL: 905.887.7457 / 905.751.7537

24 hrs, 365 days

**இலங்கை அரசே உடனடியாக போரை நிறுத்து!**

**நிரந்தர அரசியல் தீர்வை முன்வை!**





**கண்டன ஒன்றுகூடல்**

• இலங்கை அரசே! தமிழ் மக்கள் மீதான இராணுவ அடக்குமுறையை உடனடியாக நிறுத்து

• இலங்கை அரசே! தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்யும் நிரந்தர தீர்வை பகிரங்கமாக வை

• இலங்கை அரசே! தமிழ் மக்களை சொந்த மண்ணிலேயே அகதி முகாமுக்குள் அடைப்பதை நிறுத்து

• இந்திய அரசே! புலிகள் மீதான யுத்தம் தமிழ் மக்களின் மீதான யுத்தமே. இலங்கை அரசுக்கான இராணுவ உதவிகளை உடனடியாக நிறுத்து.

• தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கு

• கனடிய அரசே! இலங்கையில் நடந்துவரும் தமிழின அழிப்பை கண்டித்து ஐ. நா சபையூடாக அகதிகளை பராமரிக்கவும், மீள் குடியேற்றவும், மனித உரிமைகளை கண்காணிக்கவுமான ஒழுங்குமுறையை உடனடியாக செய்.

• கனடிய அரசே! ஐ.நா சாசனத்தின்படி சிறுபான்மை இனங்களுக்கான பாதுகாப்பு மற்றும் பூரண சுயநிர்ணய உரிமையை இலங்கைத் தமிழ் மக்களுக்கு பெற்றுத் தரக்கூடிய அரசியல் வழிமுறைகளைச் செய்

• உலக நாடுகளே! இலங்கைத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி

போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்திய உதவி தூதுவராலயம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அனைத்து மக்களையும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக்கொள்ளுகிறோம். இந்த கோரிக்கைகளை முன் நிறுத்தி இவ் நிகழ்வில் இணைய விரும்பும் அமைப்புகள் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**மார்ச் 20, 2009 வெள்ளி**
**மாலை 3:00-7:00**
**இந்திய உதவி தூதுவராலயம் முன்பாக**
**365 Bloor St. E (@Sherbourne)**
**Sherbourne Subway**

இலங்கைத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்க அனைவரும் ஒன்றிணைவோம்!

தமிழர் வகைதுறைவள நிலையம் (தேடகம்)
ரொரன்டோ, கனடா thedakam@gmail.com

**APARTMENTS FOR RENT**



***In a NEWLY Renovated High-Rise Apartment Building Clean, Utilities inclu. Free parking. Close to TTC, Tamil store in building, schools nearby***

**Pl. Call: 416.264.2818**

# ஊரோடின் ஒத்தோடு......

உலகப் பொதுப் பண்பாட்டில் மக்கள் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு, சில பண்டிகைகள் விழாக்கள் கொண்டாடப்படுவது வழக்கம். மதரீதியாக, இனரீதியாக, காலரீதியாக, வீரதீரச்செயல்கள் ரீதியாக இன்னும் பல காரணங்களுக்காக இவை அமைவது வழக்கம்.

கிறிஸ்மஸ், சூன்போர் மதரீதியாகவும்; பருவகாலங்களை ஒட்டி தைத்திருநாள், சித்திரைவருடப்பிறப்பு, விளக்கீடு போன்றனவும்; வீரதீரச் செயல்களாக விக்ரோரியா நாள், கட்டப்பொம்மன் நாள், தீபாவளி, பாரதி விழா முதலியனவும் இவைபோன்ற பிறவும் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இவை தீமையை ஒழித்து, நன்மையைக் கடைப்பிடிக்கவும், கோலாகல மாகக் கொண்டாடி மகிழவும், உல்லாசமாகப் பொழுதுபோக்கவும், உறவினர்களுடன் உண்டு களிக்கவுமான நோக்கங்களைக் கொண்டிருந்தன.

இன்றைய காலகட்டத்தில் தத்தம் கொள்கைகளுக்கேற்ப விழாக்கள் மீளாய்வு செய்யப்படுகின்றன. மாற்றங்கள் நிகழ்கின்றன. மரபுகள் மீறப்படுகின்றனவா? அல்லது ஆழ்ந்து சிந்திக்கப்படுகின்றனவா? அறிகிலோம்.

தமிழ் ஆனது ஒருமொழி. ஒரு ஊடகம். மக்களின் தொடர்பாடல்களுக்கு உதவுவது. நமக்கே நமக்கெனும் சொந்தமானது. இனிமை பயப்பது. அதனால் நமக்கு தமிழ் மீது பக்தியும் பரவசமும் உண்டாகின்றன. இம்மொழிக்கு ஓர் ஆபத்து, ஓர் அநீதி இழைக்கப்படுமானால், இன்னும் அது மக்கள்மீது பாயுமானால் தமிழ், வெறியாக மாறிவிடுகிறது. அப்போது 'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்', 'தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடேன்' என அறிவுபூர்வமாக இருந்த தமிழ், உணர்வு பூர்வமாக உசுப்பேற்றப்பட்டது.

இப்போது பொங்கலுக்கும் புத்தாண்டுக்கும் போர். 'எது தமிழர் புத்தாண்டு? கலியுகம் என்பது இதனால் நிரூபணமாகிறது. தேவையற்ற விடயங்களுக்கு கூட முரண்பாடுகள் காட்டிப் போராடும் நிலைவந்துவிட்டது. யாரோ சொன்னார்கள், கடவுள் நூறு அவதாரகளாக வந்தாலும் இந்த யுகத்தின் குணத்தை மாற்றமுடியாதாம். சத்யயுகம் எனக் கூறப்படும் கிருதயுகம் பிறக்கும் அண்மைக் காலங்களில் தான் மக்கள் மனம் அறநெறி சார்ந்து ஒழுகுமாம். எனவே கலியுகத்தின் கணிதமே முரண்பாடுகளின் விஸ்வரூபம்தான்.

தமிழ் நாட்டில் தமிழ் வளர்ச்சிக்குப் புத்தூக்கம் வரத்தொடங்கியதோடு பெரியாரின் தி.க., தி.மு.கவும் செயற்படத் தொடங்க, இதுவரை பொங்கல் வைத்து படைத்து சூரியனை வணங்கி, மாட்டுப்பொங்கல் பொங்கி, கன்னிப்பொங்கல் என்று கூறப்படும் காணும்பொங்கல் வைத்தும், மாட்டுச்சவாரி அது இது எனக் கேளிக்கைகள் முதலிவற்றோடு அக்காலத்தில் சூரியனுக்குப் பொங்கிப் படைத்தல் என்று மட்டும் தெரிந்திருந்த மக்களுக்கு ஒரு பரப்புரை நடந்தது.

இது தைத்திருநாள், உழவர் திருநாள் என நல்லதொரு அர்த்தம் கற்பித்து ஏன்? எதற்கு? எப்படி? எனும் விஞ்ஞான விளக்கங்கொடுத்து மக்கள் அறிவு பூர்வமாக அணுகப்பட்டனர்.

ஏற்கனவே சூரியனை முழுமுதற்கடவுளாகக் கொண்டு வணங்கும் சௌரமதம் இருந்து வந்தது. அதனைச் சங்கராச்சாரியார் பலமதங்களையும் ஒன்றாகச் சேர்த்து இந்துமதம் எனப் பெயரிட்டு ஷண் மதங்களாக்கி ஒற்றுமைப்படுத்தி மக்களிடையே அமைதி கண்டவர். அந்த விடயம் வராதவண்ணம் சூரியன் இன்றேல் உயிர்வாழ முடியாது. அதற்கு நன்றி தெரிவிக்கும் விழாவே இது என விளக்கம் கொடுத்தனர் தற்கால சிந்தனைவாதிகள்.

பிள்ளையார் சிலையை உடைத்து கடவுளரை மறுத்திருந்தாலும், எமது சூரியனால் என்ன நன்மை 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்' என சூரியவணக்கத்தை நன்றி தெரிவிக்கும் விழாவாக பகிர்ந்துண்ணும் வழக்கத்தை ஆதரித்து அறநெறியில் நிறுத்தி வைத்தனர். சூரியவணக்கம் நவீன சிந்தனையில் உழவர் திருநாள் ஆகியது. ஆனால் அது சூரிய வணக்கத்தை ஏற்றுக்கொண்ட மதசார்புடையதே.



சமீபகாலமாக தமிழர் புத்தாண்டு, பொங்கல் தினமே எனும் கொள்கைப் பரம்பல் நடக்கிறது. இதனைத் தமிழக அரசும் ஏற்றுக் கொண்டு விட்டது.

சித்திரை வருடப்பிறப்புக்கு ஒரு கதையும் இல்லை. மதச்சார்பும் இல்லை. அதனால் இதற்கு மதசம்பந்தமானது என முத்திரை குத்தமுடியாது. இது சௌரவருடம் எனும் போக்கில் காலச் சக்கரத்தை ஒட்டி வைக்கப்பட்டது. இராசிகள் 12 உம் முடிந்து சூரியன் மேடராசியில் புகுகின்ற நாளே வருடப்பிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இதற்கும் பொங்கல் நடக்கும். புதிய ஆடை அணிந்து, பட்டாசு கொழுத்தி, பலகாரங்கள் சுட்டு இனசன வீடுகளுக்குப் போய் நல்லநேரம் பார்த்து கைவிசேடம், எண்ணைச்சட்டி வைத்தல், நெல்விதைத்தல், எத்தொழிலுக்கும் நாள் பார்த்தல், புதுக்கணக்கு வைத்தல் என அமர்க்களப்படும். போர்த்தேங்காய் அடித்தல், கிளித்தட்டு, ஊஞ்சலாட்டம், வசந்தனடி, வண்டில் சவாரி என கொண்டாட்டம் கலகலப்பாக நடைபெறும்.

இப்போது மும்முனைப்போர். தை மாதமா சித்திரை மாதமா புத்தாண்டு?அல்லது தைப்பிறப்பு 14 நாள் தானே கூடவருகிறது. எனவே உலகத்தோடு ஒட்டி ஆங்கில வருடப் பிறப்பையே நாமும் கொண்டாடலாமே என இன்னுமொரு கோரிக்கை. அதாவது மரபில் வந்த ஒன்றை மாற்ற முடியுமாயின், இதையும் மாற்றலாம் தானே என்பதும் ஒரு நியாயமான கேள்வி.

மொழி சமஸ்கிருதம் என்றால் அதற்கென்ன ஓங்காளம். பிடிக்காவிட்டால் தமிழ்ப்பெயரை வைப்பது தானே. வானசாஸ்திர ரீதியாக அகில உலகமும் ஏற்றுக்கொண்ட வானத்தின் அளப்பை மொழிவெறிகொண்டு சிறுமைப்படுத்தலாகாது.

காலச்சக்கரத்தில் நான்கு பிரதான பருவங்கள். சூரியன் மகரரேகையிலிருந்து திரும்பும் நாள் தைப்பிறப்பு அல்லது 'மகரசங்கராந்தி', மத்தியரேகை வரும்போது சமமான இரவும் பகலும். மத்தியரேகையிலிருந்து 7 அல்லது 8 பாகை வரை அவ்வவ் இடங்களில் வதிவோருக்கு சூரியன் உச்சியில் வரும். அத்தினம் தான் பங்குனிக் கடைசிவாரமோ சித்திரையோ ஆகும். அனேகமாக சித்திரை 7ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதி வரையாகும். புவியியல் கற்றோர்க்குத் இந்நாட்கள் தெரியும்.

சித்திரை, வைகாசி மாதமே இளவேனிற் காலம். பூ பூப்பதும் பிஞ்சு பிடிப்பதும் மரங்கள் துளிர்ப்பதும் ஆகும். மத்தியரேகையை அண்டி வாழ்கின்ற பிரதேசங்கள் பலவும் இதனையே தமது புத்தாண்டாகக் கொண்டு வருகிறார்கள். இலங்கையின் இரு இனங்களும் மாத்திரமல்ல. (ஆந்திரா பங்குனி 27) ஆந்திரா, கன்னடம், மலையாளம் மேலும் சில மாநிலங்களும் கிழக்கிந்தியத் தீவுகளும் ஜப்பான் ஆபிரிக்காவின் சில பிரதேசங்களும் சித்திரையையே புத்தாண்டாகக் கொண்டாடுகிறார்கள் எனக் கேள்விப்படுகிறோம்.

சங்க இலக்கியங்களுள், இதுதான் புத்தாண்டு என ஒருதினமும் குறிப்பிடப்படாதிருந்தாலும் காலத்துக்கேற்ற விழாக்கள் கொண்டாடப்படுவதைக் காண்கிறோம். தை நீராடல் என்பது ஒன்று. இதை ஒட்டித்தான் மாணிக்கவாசகர் திருவெம்பாவை பாடியுள்ளார். சித்திரையில் இந்திரவிழா அல்லது வசந்தவிழா என இளவேனில் காலம் (சிலப்பதிகாரத்தின் இந்திரவிழா எடுத்த காதை) மகாபாரதத்தில் பாண்டு மன்னன் இறக்க நேர்ந்த காலம்.

தமிழர்கள் எனும் உணர்வு உந்தலால் வடமொழி எனப் பலவற்றைக் கழித்து வைத்தோம். கவிஞர் கந்தவனமும், லலிதா புறூடியும், சங்கரப்பிள்ளையும் ஆங்கிலத்தில் கவிதை நூல்கள் வெளியிட்டமையால் அவர்கள் ஆங்கிலேயர் ஆகமாட்டார்கள். ஆனால் காலத்தால் அழியாதிருந்தால் ஒரு நூறு வருடத்தின் பின் இந்நூல்களின் ஆசிரியர் பற்றிய ஆய்வில் இவர்கள் ஆங்கிலேயர் என முடிவு பெறக்கூடும்.

ஒரு நாட்டில் ஒரு காலகட்டத்துள் ஏதோ ஒருமொழி ஆட்சிக்குட்பட்டதாக இருந்தால் அந்த மொழியில் நூல்கள் வருவது ஆச்சரியமல்ல. எங்கள் நாட்டிலும் அரச கரும மொழியில் சிறுகதையும் கவிதையும் நாடகமும் எழுதிய 'தமிழ் எங்கள் உயிர்' பேசிய தமிழர்களும் இருந்தார்கள். பரதமுனிவரின் நாட்டிய சாஸ்திரம் எனும் வடமொழி நூலின் முகவுரையில் 'இந்நூல் திராவிட மொழியினரின் நாடக பாங்கை அடிப்படையாகக் கொண்டது எனக் காணப்படு கிறது. அதனாலும் வேறு பல சான்றுகளினாலும் பரத முனிவர் தமிழரே என்று சொல்லப்படுகிறது.

கா. சுப்பிரமணியபிள்ளையின் தமிழர் பற்றிய ஆய்வைக் கணக்கெடுக்கக்கூடிய புத்தியும், சிந்தனையும் நமக்கு இல்லாதிருக்கலாம். நவீன கல்வி முறையால் நம்பாதும் இருக்கலாம். ஆனால் ந.சி. கந்தையாபிள்ளை எழுதிய 'தமிழர் சரித்திரம்' பல ஆங்கில அறிஞர்களின் கூற்றுக்களைத் துணைகொண்டு தரப்பட்டிருக் கிறது. எமது தமிழில் இருந்துதான் மற்றைய மொழிகள் பிறந்தன அல்லது கலந்தன. தமிழர் வானசாஸ்திரத்தால் மற்றைய நாகரிகங்களை விட முன்னின்றனர், என்பது பெறப்படுகின்றது.

ஆரியர் வருகைக்கு முன்னரே சூரியவழிபாடு, சிவன்வழிபாடு இருந்தன எனவும் வியாழக்கிரகத்தின் 5 சுற்றுக்களை வைத்தே 60 வருடங்கள் பிறந்தன எனவும், தமிழர்களின் விழாக்காலங்கள் சூரியனால் ஏற்படும் பருவகாலங்களையும் சந்திரனாலுண்டாகும் நிலாக்காலங்களையும் பொறுத்தனவாய் இருந்தன எனவும், 60 வருடகால அளவை ஆரியருடையதல்ல என 'மகலீன்' என்பவர் கூறியுள்ளதாகவும் காட்டி இருக்கிறார். ('தமிழர் சரித்திரம்' - பக்கம் 102) தமிழை அடிப்படையாகவைத்து பிறமொழிகள் தோன்றின என்பது தற்கால ஆய்வாளர்களின் கருத்தாகும்.

வேதம் ஓதுதலே பிரதான தொழிலாகக் கொண்ட இந்தியபிராமணர்களின் 'ஜீன்ஸ்' எனும் பரம்பரை அலகுகள் வீரியம் பெற்றவையாக இருக்கலாம். எங்கள் முயற்சிகளால் அதைவெல்லலாமே தவிர காழ்ப்புகளாலும் துவேஷங்களாலும் வெல்ல முடியாது. சாலிவாகன சகாப்தம் என்பதில் 60 ஆண்டு எத்தனை சுற்று வந்திருக்கின்றது? திருவள்ளுவராண்டு எனச் சொல்லும் போது இந்தத் தமிழினத்தின் வரலாறு 2000 ஆண்டுதானா? எனும் ஆதங்கமும் ஏற்படுகிறது.

'சகல சௌபாங்கியங்களோடு கூடிய வாழ்க்கையும் ஆனந்தம் தருவதில்லை. உலகியல் சுகங்கள் பெருகப் பெருக அமைதியின்மை, முரண்பாடு, ஆடம்பரம், பகட்டு, அசூசை, துவேஷம் முதலியன பெருகும். அவற்றை மறக்கமுயல்வோம். கல்வியறிவு, அனுபவம், நல்லுணர்வு, திருப்தி, கலையுணர்வு நிறைந்த சமூகத்தில் ஒருவரோடு ஒருவர் ஒற்றுமையாக நிறைவோடு சகிப்புத்தன்மை, சாந்தி, பிரேமை ஆகிய நற்பண்புகள் நிறைந்த தலைமுறைகள் உருவாகட்டும். அப்போதுதான் நிரந்தர ஆனந்தம் பொங்கிவரும்' என்பதே பகவான் சத்யசாயிபாபாவின் புதுவருடச் செய்தியாகும். அதுவரை இவ்விழாக்கள் தாம் ஆனந்தம் தருபவை.

ஊரோடுகில் ஒத்தோடுவோம். அறிஞர் பலரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தமிழ்நாட்டில் பிரகடனப் படுத்தப்பட்டு, அதனையே பரப்புரை செய்து தமிழர் புத்தாண்டென பலரால் ஏற்றுக்கொள்ளப் பட்டமையால் பிரச்சினைப்படாமல் பொங்கல் விழாவைப் புத்தாண்டாகக் கொண்டாடலாம்.

ஒருவன் ஓடுகில் கேட்டோடு என்பர். இவற்றைக் கேட்டு உண்மை பொய்களை ஆராய்ந்து இதன் பின்னணியில் என்ன இருக்கிறது என மெய்ப்பொருள் கண்டு துணியலாம். பரந்த நோக்கோடு மரபுதழுவிப் பயில எம் போன்ற தளம்பல்கள் இரண்டையுமே கொண்டாடுவோம். ஊரில்தான் ஏழைகள் தீபாவளிக்கு மட்டும் அலைந்து உழைத்துப் புதுத்துணி பெறுவர். சிறிது வசதியானவர் வருடப்பிறப்புக்கும் புதிய உடை எடுப்பர். நல்ல வசதியுள்ளோர் தைப்பொங்கலுக்கும் எடுப்பர்.

கனடாவில் நாமோ பண்டிகைகளுக்கு மாத்திரமல்ல கலியாணம், புனித நீராட்டு, புதுமனை புகுவிழா, கிறிஸ்மஸ், புத்தாண்டு, புத்தக வெளியீடு என 12 மாதமும் கோடி உடுத்துக்கொண்டாடுவதால் எமக்கு எதுவித பிரச்சினையும் இல்லை. மூன்று புத்தாண்டையும் கொண்டாட முடியும். ஆயினும் தமிழ் புத்தாண்டு எனச் சொல்லப்படும் இந்நன்நாளை பொங்கல் வைத்துக் கொண்டாடுவோம். தமிழர் புத்தாண்டைப் பொங்கல் வைத்துக் கொண்டாடுவோமாக.



**- குறமகள் -**

**பொங்கல் தினத்துக்கு எழுதப்பட்ட கட்டுரை**


**வருமான வரி மீள்வு**

***Income Tax Refund***



- தனிப்பட்ட குடும்பத்தினரின் வருமான வரி மீள்வும் எதிர்கால ஆலோசனைகளும்
- தனியாக தொழில் முயற்சியில் ஈடுபடுவோரின் வரிப்பத்திரம் தயாரிப்பதும் எதிர்கால ஆலோசனைகளும்
- வாடகை வருமான செலவுகளுக்கான (வீட்டின் ஒரு பகுதியோ, முழுமையாகவோ) வரி மீள்வு சேவை

**உதயன் ஐயாத்துரை Tel.: 416.999.3555**

# நன்றிக்குரிய பொங்கலும் தமிழ்ப் புத்தாண்டும் சுறவம் ஓராம் நாளே

தமிழ் நாட்காட்டியின் படி சுறவம் 3ஆம் நாள் (தமிழரின் தவறான நடைமுறையில் உள்ள சர்வதாரி ஆண்டின்படி தைத் திங்கள் 2 ஆம்நாள் ஆங்கில ஆண்டின் நாட்காட்டியின் படி சனவரி 15ஆம் நாள்) மற்றும் சுறவம் 20 ஆம் நாள் (தைத்திங்கள் 20 ஆம்நாள் பிப்ரவரி 1 ஆம் நாள்) விளம்பர இதழில் வெளிவந்த நன்றி நவிலும் நாள் தைப்பொங்கல் என்னும் கட்டுரை படித்தேன். கட்டுரை எழுதவதற்கு மொழியாளுமை முதன்மையானதொன்று. அடுத்து எதைப் பற்றி எழுதகிறோமோ அதைப்பற்றி நன்கு தெரிந்த பின்தான் அதை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். தவறான கட்டுரையை வெளியீட்டை திருத்த வேண்டிய பொறுப்பு எனக்கு உண்டு. வழி மாறி நடப்பவர்களுக்கு சரியான வழியைக் காட்ட வேண்டிய கடமை என்னுடையது. நிறைவான ஆய்வு இன்றி சரியான தகவலை பிழையாக மக்களுக்கு வழங்கும் கட்டுரை ஆசிரியரை வன்மையாகக் கண்டிக்கிறேன். பிழையான வழியில் மக்களை திசை திருப்புவர்களுக்கு இதன் தெளிவை வழங்க முன் வந்துள்ளேன். விளம்பர அலுவலகக் குழு தந்த இந்த வாய்ப்புக்கு நன்றி.

திருவள்ளுவர் ஆண்டைப்பற்றி அல்லது பொங்கலைப் பற்றி எழுதுவதற்கு தமிழனுக்கு மட்டுமே உரிமை உண்டு. தமிழில் எழுதக்கூடிய தமிழ் எழுத்தாளருக்கு மட்டுமே உரிமை உண்டு. என்னுடைய பட்டறிவைக் கொண்டு சொல்கிறேன். இங்கே அகவை முதன்மையானதல்ல. அறிவை வளர்த்துக்கொள்கின்ற வேகம்தான் முதன்மையானது.

பல மொழிகள் அக்கட்டுரையில் இருப்பதால் தமிழ்மொழியறிவின் பலவீனம் தெரிகிறது. தமிழை தமிழில் தெளிவுபடுத்த முடியாமல் வேற்று மொழி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது மொழி அழகை கெடுக்கிறது. எழுத்தாளர் மொழியின் ஆளுமையில் தெளிவு பெற வேண்டும் என்று கூறிக் கொண்டு கட்டுரையில் வழங்கப்பட்ட பொருளை விட நாம் இப்போது நடைமுறையில் மிக அதிகமான தவறுகளை தப்புத்தப்பாக செய்து கொண்டிருக்கிறோம் என்பதை உறுதிப்படுத்திக் கூறி திருவள்ளுவர் ஆண்டு தான் தமிழரின் ஆண்டு என்பது உறுதியாகவும் ஆணித்தரமாகவம் சொல்கிறேன்.

நன்றி நவிலும் நாள் தைப்பொங்கல். நன்றி தமிழ். நவிலல் தமிழ் அல்ல. நாள் தமிழ். தைப்பொங்கல் என்பது பிழையான சொற் பயன்பாடு. தை என்பது வடமொழிச்சொல் தமிழ் அல்ல. பொங்கல் தமிழ். நன்றிக்குரிய பொங்கல் என்பதே தமிழாகும். வெள்ளைக்காரனின் நன்றிக்குரிய நாளைக் கண்ட பின் தான் பொங்கலும் நன்றிக்குரியது என்பதை தமிழர் புலம்பெயர்ந்த பின் உணர்ந்தனர். பிறந்த மண்ணில் உணரவில்லை. ஆனால் எமது சான்றோர்கள் வெள்ளைக்காரர் நன்றிக்குரிய நாளை கொண்டாடுவதற்கு முன்பே தமிழர் நன்றிக்குரிய பொங்கலை நடைமுறைப்படுத்தியிருக்கின்றனர்.

பிறந்த மண்ணில் வேற்றின மோகத்தினால் சிக்குண்ட நாம் பகுத்து அறிந்து செயல்படாதினால் பல சிக்கல்களை நாளாந்தம் பகிர்கிறோம். நாம் பகுத்து அறிந்து வாழ்வோமாகில் எமது வாழ்க்கை மகிழ்ச்சிக் கடலாக இருக்கும்.

## சர்வதாரி ஆண்டு 2009

தமிழர் இன்று நடைமுறையில் வைத்திருக்கும் வடமொழிப் புத்தாண்டு சித்திரை 13 அல்லது 14 இல் வரும். சித்திரையில் பிறக்கும் புத்தாண்டு தமிழருடையதல்ல. தமிழருக்குள்ளே ஆரியரினால் புகுத்தப்பட்டது. இன்று தமிழராகிய நாம் தெளி வில்லாமல் நடைமுறையில் பயன்படுத்துகின்ற சர்வதாரி ஆண்டு 2009. இதை தெளிவுற பார்ப்போமாக இருந்தால் சர்வதாரி ஆண்டு என்பது 60 ஆண்டு சுழற்சியில் உள்ள ஒரு ஆண்டு என்பது சரி. ஏப்படி 2009 வந்தது. ஆங்கில ஆண்டிலிருந்து புடுங்கியது. இந்த ஆண்டு நிலாவை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்டது. இந்த ஆண்டு தமிழரின் பொருளாதாரத்தை சீரழிப்பதோடு தமிழரின் உயர்வுக்கும் தடையாக இருக்கின்றது.

2008 ஆம் ஆண்டு நவராத்திரி நோன்பு 11 நாட்கள் நடந்தன. இப்படி பல பிழையான வழிகளைக் கொண்டது சர்வதாரி ஆண்டு. காலத்தை எண்ணிக்கை அடிப்படையில் தான் கணிக்க முடியும். சர்வதாரி ஆண்டை வைத்து உங்கள் அகவையை எப்படி கணிப்பீர்கள். 1960 ஆம் ஆண்டு பிறந்தவரின் அகவை எப்படி வடமொழி ஆண்டின் படி இன்னெருவருக்கு தெரி யப்படுத்த முடியும். முடிந்தால் சொல்லுங்கள். தமிழன் பிறந்தால் ஆங்கில ஆண்டின் படி பிறந்தநானை குறிப்பதும் வடமொழி நாட்காட்டி யின்படி ஒரை மற்றும் உடுவை குறிப்பதும் எந்தவகையில் சரியானது. இந்த ஊனத்தில் இருந்து விடுபட வேண்டும் என்றால் பகுத்து அறிந்து அறிவை வளர்த்துக் கொண்டால் நிறைந்த தமிழனாக வாழலாம். முயற்சி செய்யுங்கள். கிழமை திரும்பி திரும்பி வருகிறது. மாதம் திரும்பி திரும்பி வருகிறது. ஆண்டும் திரும்பி வருகிறது. இரவுபகல் திரும்பி திரும்பி வருகிறது. பகலவனும் நிலாவும் திரும்பி திரும்பி வருகிறது. நேரம் திரும்பி திரும்பி வருகிறது. உங்கள் அகவை எப்படி திரும்பி திரும்பி வரும். வரலாற்றுப் பதிவு திரும்பி வருமா? ஆபிரிக்க அமெரிக்க ரான ஒபாமா அமெரிக்க நாட்டின் முதல்வராக சனவரி 20 ஆம் நாள் பதவி ஏற்ற நிகழ்வின் பதிவு மீண்டும் அதே நிகழ்வு இன்னெருநாளில் நடக்குமா? ஆகவே காலத்தின் கணிப்பு எண்ணிக்கையைக் கொண்டதாக இருக்க வேண்டுமே தவிர சுழற்சி முறையில் வருவது நூற்றுக்கு நூறு விழுக்காடு பிழை என்பது எனது உறுதியான எண்ணம். இந்த ஆண்டு தமிழர்கள் சண்டை பிடிப்பதற்காக தொடக்கப்பட்டது. இது 365 நாளும் தமிழர்கள் தவறாகப் பயன்படுத்தும் ஆண்டு.

## ஆங்கில ஆண்டு

கிறித்தவரின் ஆண்டாகும். ஆங்கிலப்புத்தாண்டு சனவரி ஓராம் நாள் இரவு 12 மணிக்கு பிறக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் ஒரே நாள் ஒரே நேரம். அதில் எதுவிதமான மாற்றமும் இல்லை. இது சமயம் சார்ந்தது அல்ல. ஆங்கிலப் புத்தாண்டு தேவன் கோயில் நகர மையப்பகுதியில் பல குடும்பத்தவர் ஒன்றாக ஓரிடத்தில் கூடியும் உணவகங்களில் என பல்வேறு வழிகளில் புத்தாண்டைக் கொண்டாடுகிறார்கள். எல்லோருடைய ஒரே கொள்கை புத்தாண்டு பிறக்கும் பொழுது எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்பதாகும்.

## திருவள்ளுவர் ஆண்டு

1921 ஆம் ஆண்டு தமிழ்ச் சான்றோர் அறிஞர் புலவர் பல்துறை சார்ந்தோர் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 'தமிழ்க்கடல்' மறை மலை அடிகளின் தலைமையில் 500 மேற்பட்டோர்

தொடர்ச்சி 27ஆம் பக்கம்


# கடன்... பணம்

**கடன் பிரச்சினையில் மூழ்கித் தவிக்கிறீர்களா?**

**நிதிப் பிரச்சினைக்கு தீர்வு காண நாடுங்கள்**

- Bankruptcy - செய்து கொடுத்தலும் இலவச ஆலோசனையும்
- Debt Consolidation
- Line Of Credit
- Personal Loan
- Business Loan
- Indian Visa Arrangement
- Students Loan Amount Reduced
- Credit Rehabilitation [ Answer within 24 hours ]
- Mortgage Problems & Refinancing
- Any Immigration Problems with Free Advice
- Are you under Deportation? Call Us
- Are You New To Canada - Call Us
- Have You Problem With Your Car Loan Payment
- Have You Been Laid Off Unfairly?
- Any Kind Of Legal Services
- Mortgage - கட்டமுடியாமல் உங்கள் வீட்டை Bank எடுக்கின்ற நிலைமையா?
- வாகன விபத்துக்கு உள்ளானீர்களா? காயமடைந்து விட்டீர்களா? உங்களுக்கு பெரிய நிதியை காப்புறுதி நிறுவனத்திடமிருந்து பெற்று தருவோம்.
- உங்களின் உரிமைகளை எங்களின் மூலம் வெல்லுங்கள்.



**Credit Score** குறைவு என்ற கவலை வேண்டாம்.

*We help our community*

முற்றிலும் இலவச ஆலோசனைகளுக்கும் சேவைகளுக்கும்

அழையுங்கள் சுரேஸ்: 416-662-9860

# ஒளிமயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகிறது

**என் மூலம் வீடு வாங்குவது / விற்பதன் மூலம் BMW ஒன்றை வெற்றிகொள்ளலாம்**



**Recreation Camp**
**Temple, Yoga**
**Senior Home**

**Small Down**
**Economic House**
**Quick sale**

**Land 13 Acres**
**1½ Hours Drive**
**Incomplete Property**

**Finch & Neilson**
**3+1 Bedroom**
**Semi detached**
**Finished basement**

*We look after* **seniors over 70 years** *peaceful life.*

**Condo. Senior home facility in Toronto $235,000.**

வீடும் வியாபாரமும் **Business Zoning**

**Future long term Investment**

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு

அழையுங்கள் - Sitham (Sam) Shanmugam (Sales Rep)

416.230.7820 / 905.696.7310

HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

150 - 200 Acres land for sale in Peteboroug. Farm Land value.

# புனித பற்றிக் தினம் (மார்ச் 17)

அயர்லாந்து தேசத்துப் போதகரான புனித பற்றிக் குருவானவரின் தினம் மார்ச் 17 ஆகும். எங்கெங்கு ஐரிஸ் மக்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் விமரிசையான விழாவாக மலர்கின்றது. பல்லினமக்கள் வாழும் கனடாவிலும் சகலராலும் விரும்பி அனுட்டிக்கும் நாள் இதுவாகும்.

அயர்லாந்துப் போதகரானாலும் அவர் புனிதராகப் (அப்போஸ்தலர்) பிரகடனம் செய்யப்பட்டமையால் அகில உலகிலும் வாழும் கிறிஸ்தவர்களால் இத்தினம் கொண்டாடப்படுகிறது.

அன்றைய தினம் மாணவர், ஆசிரியர், அலுவலர், வர்த்தக நிலையத்தினர் அனைவரும் பச்சை நிறத்தில் உடை அணிவர். பச்சை நிறத்தில் இனிப்பு, கேக் வகைகள், அலங்காரமாக கானேசன்புல், பச்சைக் கொடிகள் என அமர்க்களப்படும்.

புனிதபற்றிக் அடிகளார் மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். றோமாபுரியைச் சேர்ந்த தந்தைக்கும் பிரான்ஸைச் சேர்ந்த தாய்க்கும், ஸ்கொட்லாண்டில் பிறந்தவர். தந்தை ஒரு நீதிபதி. ஒரு றோமன் பிரஜைக்குத் தேவையான அறிவைத் தந்தையிடமிருந்தும், பிரபுத்துவ அரச சபைக்குரிய பழக்கவழக்கங்களை தம் தாயிடமிருந்தும் கற்றுக்கொண்டார்.

இவருக்குப் 16 வயதாக இருக்கும் போது ஒருநாள் வீட்டின் முன் தீமூட்டிக் குளிர் காய்ந்து கொண்டிருக்கும்போது கடற் கொள்ளைக்காரர் புகுந்து அடித்து நொருக்கி கொள்ளையடித்ததோடு, அடிமையாக விற்பதற்கு இவர் நல்ல பதமானவர் எனக்கண்டு பிடித்துக் கொண்டு சென்று விட்டனர்.

அயர்லாந்தில் இவரை நல்ல விலைக்கு விற்றுவிட்டுச் சென்றதும், பன்றி மேய்க்கும் துன்பத்துக்கு ஆளானார். மலைமீதும் புல்வெளியிலும் பனியிலும் குளிரிலும் ஆறு வருடங்களைக் கழித்தார்.




**- சத்யப்பிரியா -**

அந்நாட்களில் தாயார் சொல்லிக் கொடுத்தபோது வெறுப்புடன் கற்ற வேதப்பாடல்களே அவருக்குத் தஞ்சமாயின. பாடிப்பாடிப் பொருள் பொதிந்த அர்த்தங்களைப் புரிந்து இறைவிசுவாசம் மிக்கவர் ஆனார்.

அயர்லாந்து மக்களின் மொழியையும் பழக்க வழக்கங்களையும் கற்றுக்கொண்டார். மலைமேல் இருந்த ஷாம் றொக் செடியின் கூர்க் காம்புடன் கூடிய மூன்று இலைகளும் அவரது கவனத்தை ஈர்த்தன. புனித திரித்துவமாக, அதன் இலச்சனையாக அது விளங்குவதாக அவர் உணர்ந்து கொண்டார். திரித்துவம் என்பது ஒரேயொரு சர்வேஸ்வரன் என அந்தக் காம்பையும் பிதா, சுதன், ஆவி என அந்த மூன்று இலைகளையும் கற்பித்துக் கொண்டார். அதனைத் தேவ சின்னமாகக் கருதி பிற்காலத்தில் மக்களிடையே பிரச்சாரம் செய்தார்.

ஒருநாள் கனவு கண்டு கடற்கரை சென்று ஒரு கப்பலைக் கண்டார். தன்னைத் தன்நாட்டில் கொண்டு போய் விடுவதாயின் தான் கப்பலில் வேலை செய்து பயணக் காசைத் தருவதாகக் கூறித் தன் அடிமை வாழ்வினின்றும் தப்பித்துக் கொண்டார்.

சிலநாட்களின் பின் கப்பல்காரர் காட்டுக் கரைகளில் ஒதுங்கியும் உணவு கிடைக்காமையால் வருந்தினர். எந்நாளும் இவர் இறைவழிபாடு செய்வதைக் கண்டு, 'உனது இறைவனிடம் இருந்து உணவு வரவழை பார்க்கலாம்' என்றனர். பற்றிக் பிரார்த்தனை செய்தார். அப்போது பன்றிக் கூட்டம் ஒன்று இவர்கள் கண்களில் படுமாறு ஓடிற்று. அவற்றை வேட்டையாடி பல நாட்களுக்கான உணவு தயாரித்தனர். மகிழ்ச்சியடைந்த கப்பல்காரர் இவரை அவரது ஊரிலேயே இறக்கிவிட்டுச் சென்றனர்.

அடிகளார் ஐரோப்பாவின் பல இடங்களுக்குச் சென்றும் மதம் பரப்பலுக்கான கல்வி பெற்றும், பூரணமான குருவானவராக மீண்டும் அயர்லாந்துக்கே சென்றார். அவர் இறங்கிய பகுதியில் சூரியனை வணங்குபவர்கள் இருந்தார்கள். அது ஒரு விழா நாள். அரசன் வந்து மலையின் மீதுள்ள விளக்கை ஏற்றும் வரை ஊரில் எவரும் விளக்கு ஏற்றக்கூடாது. இருள் சூழ்ந்திருந்த கிராமத்தைக் கண்டு அடிகளார் மலைமீது ஏறி விளக்கை ஏற்றி வைத்து அரசனின் கோபத்துக்கு ஆளானார். ஆனால் பல அற்புதங்கள் நடந்தேறியதைக் கண்டு அரசனும் குடிகளும் மதம் மாறினர்.

இன்னொரு பிரதேசத்தில் பாம்பு வணக்கம் நடைபெற்று வந்தது. பாம்புகள் கொல்லப்படாமையால் நாடு முழுவதும் பாம்புகள் நிறைந்து காணப்பட்டன. இந்த மூட நம்பிக்கையை ஒழிக்க வேண்டுமெனக்கொண்டு ஒரு மேளகாரனுடன் புனித பற்றிக் சென்றார். அவன் தம் பறையை அடிக்க அடிக்க பாம்புகள் எல்லாம் இடிகேட்ட நாகம் போல அலமந்து ஓடிக் கடலில் வீழ்ந்து மடிந்தன. இன்றுவரை அயர்லாந்தில் ஒரு பாம்புகூட இல்லை எனக் கூறப்படுகிறது.

அடிகளார் அங்கே இருந்த காலத்தில் குருவாகவும் பிஷப்பாகவும் கடமையாற்றியதோடு நூற்றுக்கணக்கான ஆலயங்களையும் பாடசாலைகளையும் கட்டுவித்தார். கத்தோலிக்க மதப் பரம்பலால் அங்கே உறுதியான இறையுணர்வு ஏற்பட்டது.

இன்றும் பச்சை நிறத்தில் பட்டொளி வீசிப் பறக்கும் தேசீய கொடியில் ஷாம்றொக்கின் காம்புடன் கூடிய மூன்று இலைகளே பொறிக்கப்பட்டுள்ளது. பச்சைப் பசேலென மரகதக்கல்லாக ஒளிரும் அயர்லாந்தை அது நினைவூட்டி நிற்கின்றது.

இன்றைய நிலையில் அங்கே கத்தோலிக்கமும் கிறிஸ்தவமும் போட்டா போட்டியிடுவதனால் மதச் சார்பான போராட்டங்கள் மலிந்து போயின. இடைக்கிடை பேச்சு வார்த்தை, தீர்வுகள், அமைதி கண்டும் இருந்தாலும் இங்கிலாந்து எதிர் அயர்லாந்துப் பகைமை முற்றாகத் தீர்ந்ததென்பது நம்மால் சொல்லமுடியாது.


A.V. M. MAX 2000

ஒவ்வொரு மாதத்திலும் இரண்டாவது கிழமை U. S. A பயணம்
சரித்திர முக்கியத்துவம் நிறைந்த இடங்களும், Shopping உம் உண்டு April 05 / May 09

மூன்று நாள் சுற்றுலா May 15 முதல் 18 வரை
New York City சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், Shopping.

July 31 to August 06 Quebec சுற்றுலா

Vancouver & West Cost 14 days

Ontario & Across the Border
June 27 முதல் August 22 வரை மீண்டும் Nov. 28 முதல் Dec.19

Apple Picking Starts From September 12, 19 & 26
October 10, 13 & 17

July Cherry Picking & Buffalo பயணம்

Plan Your Holiday Around These Dates
இவ்வாண்டு விடுமுறைக்கான பயண ஒழுங்குகள் ஏராளம் நீங்கள் தயாரா?
விபரங்களுக்கு: 416-609-2542

விடுமுறை காலங்களில் சுற்றுலா செல்லத் தயாராகுங்கள்!




November & December ஒரு நாள் சுற்றுலா Christmas Village

Victoria Day Long Weekend
New York City பயணம்

August Civic Holiday Long Weekend

அத்தனை குழம்பும்
அத்தனை ருசி...!



தரத்திலும் No.1

ஆரோக்கியத்திலும் No.1

இப்போது புதுமையிலும் No.1

Niru BRAND ®

வறுத்த மிளகாயத் தூள்

நா நரம்புகள்
சிலிர்த்திடும் ருசி!

Marketing By Tamil Source

நிரு பிராண்ட்

40 Minuk Acres, Scarborough, ON M1E 4Y6.
Tel: (416) 750-1976, Fax: (416) 750-8779
E-mail:info@niru.com

# நன்றிக்குரிய பொங்கலும்...

24ஆம் பக்கத்தொடர்ச்சி

ஒன்று கூடி ஆராய்ந்தனர். இந்த ஆய்வின் முடிவாக திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டாகக் கொண்டு அதையே தமிழ் ஆண்டாகக் கொண்டனர். இந்த நிகழ்வில் பங்கேற்ற அறிவப் பெருந்தகைகளாக வ. உ சிதம்பரனார் பாவேந்தர் பாரதிதாசன் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை தமிழறிஞர் சி. கணேசையர் உ.வே.சாமிநாதையர் புலவர் வே. அகிலேசப்பிள்ளை முனைவர் மு.வரதராஜன் இரா.பி.சேதுப்பிள்ளை போன்றோர் உள்ளடங்கலாக பகுத்தறிவு பெருந்தகைகள் சைவப்பெரியார்கள் எழத்தாளர்கள் கிறித்தவ அடிகள் போன்ற பலரும் இதில் கலந்து கொண்டனர் என்பதற்கு சான்றுகள் உண்டு.

தமிழரின் காலக்கணிப்பு பகலவனை அடிப்படையாகக் கொண்டது. பகலவன் தோன்றும் வேளையில் இருந்து மறையும் வேளை வரை பகல் எனவும் பின்னர் இரவு எனவும் கணித்தனர். ஒரு நாள் என்பது பகலவன் தோன்றி மீண்டும் அடுத்த நாள் தோன்றும் வரை ஆகும். வான மண்டலத்தை 12 ஓரைகளாகப் பிரித்திருந்தனர். ஒரு ஓரைக்குள் பகலவன் நுழைந்து வெளியேறும் காலத்தினை ஒரு திங்கள் எனக் கணக்கிட்டுக் கொண்டனர். 12 ஓரையையும் 12 திங்களாகக் கொண்டனர். பகலவனை நடுவில் கொண்ட நீள் வட்டப்பாதை யில் பூமியில் இருந்து பார்த்தால் பகலவனுக்கப் பின்புறம் ஒரு ஓரை மறைந்திருக்கும். அந்த ஓரை மறைந்திருக்கும் காலம் தான் ஒரு திங்கள் ஆகும்.அப்போது அந்த ஓரையின் வடிவத்தைக் கொண்டே ஒவ்வொரு திங்களின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக தமிழரின் முதல்திங்கள் சுறா வடிவத்தைக் கொண்டதால் சுறவம் என அழைக்கின்றனர். இரண்டாவது திங்கள் கும்ப வடிவைக் கொண்டதால் கும்பம். இப்படி மீனம் மேழம் விடை ஆடவை கடகம் மடங்கல் கன்னி துலை நளி சிலை என 12 திங்களும் தமிழில் அழைக்கின்றோம்.

சுறவம் ஓராம் நாளை மாற்ற முடியாது. ஏனென்றால் பகலவனுக்கு பின்புறத்தில் மறையும் ஓரை சுறா வடிவத்தைக் கொண்டதால் அது தொடக்க திங்கள். ஆகவே அதை மாற்ற முடியாது.

திருவள்ளுவர் ஆண்டு ஒவ்வொரு ஆண்டும் சுறவம் ஓராம் நாளே. உலகத்திலே யார் தமி ழைப் பேசுகிறார்களோ அவர்களுடைய புத்தாண்டும் பொங்கலும் திருவள்ளுவர் ஆண்டு சுறவம் ஓராம் நாளே. ஆண்டின் பெயரில் தமிழ் தெறிக்கிறது. திங்களின் பெயர்கள் தமிழாக இருக்கின்றன.

திருவள்ளுவர் ஆண்டு விருப்பமில்லை என்றால் வேறு இனமாக மாறுங்கள். அதற்காக தமிழனுடைய அழகைக் கெடுக்காதீர்கள். இப்ப மட்டும் என்ன தமிழனாக இருக்கிறீர்களா? இல்லைத்தானே. ஏனென்றால் உங்கள் பெயர் தமிழ் அல்ல. உங்கள் வைப்பக அட்டையில் இடும் கையெழுத்து தமிழில் அல்ல. உங்கள் பிறந்த நாளும் தமிழ் நாட்காட்டியின்படி இல்லை. அப்ப நீங்கள் எப்படித் தமிழனாக இருக்க முடியும். வடமொழியையே கட்டிப் பிடியுங்கள். திருவள்ளுவர் ஆண்டைப் பற்றி கதைத்துக் கொண்டுபூச்சாண்டி காட்டவேண்டாம்.

நீங்கள் தமிழனாக வாழ வேண்டுமானால் தமிழைப் பேசு. சைவத்தமிழனாக வாழ வேண்டுமானால் தமிழில் பூசையைச் செய்து இசையைப் பயின்று பன்னிரு திருமுறைகளை மனம் நிறையப் பாடு. வீட்டைக்கோயிலாக நினை. மனைவி பிள்ளைகளை ஏனைய கோயிலில் உள்ள ஏனைய இறைவனாக நினை. வீட்டைச் சுத்தமாக வைத்திரு. மனம் சுத்தமடையும். தமிழ் வாழ தமிழைப் பேசு

தமிழர் திருநாள்

திருவள்ளுவர் கிழமை விழா

| | |
|---|---|
| சிலை 29 | போகிவிழா |
| சுறவம் 1 | பொங்கல் புத்தாண்டு திருநாள் |
| சுறவம் 2 | திருவள்ளுவர் விழா |
| சுறவம் 3 | பட்டிப்பொங்கல் |
| சுறவம் 4 | இயல்தமிழ்விழா |
| சுறவம் 5 | இசைத்தமிழ்விழா |
| சுறவம் 6 | நாடகத்தமிழ்விழா |

தமிழ் ஆண்டிலே உடன்பாடு இல்லாதவர்கள் தமிழ் ஆண்டை கொச்சைப்படுத்தாதீர்கள். நடைமுறையில் உள்ள ஆண்டைப் பற்றி ஆய்வு செய்யுங்கள். தவறாக நடைமுறை ஆண்டைப் பயன்படுத்திக் கொண்டு அறிஞர்களினால் தொடக்கப்பட்ட அறிவு சார்ந்த ஆண்டைக் கொச்சைப்படுத்தாதீர்கள். உங்களில் நம்பிக்கை கொள்ளுங்கள். நடைமுறைக்கு ஒவ்வுதலை உணருங்கள் பின்பற்றுங்கள். உங்களிடத்தில் உள்ள அறியாமை என்ற அழுக்கை விலக்குங்கள். தாழ்வுமனப்பான்மை என்ற சூரனை போர் செய்து உங்கள் மனத்தில் இருந்து விலக்குங்கள். மொழியறிவை வளர்த்துக் கொள்ளுங்கள். தமிழனாக வாழ முயற்சி செய்யுங்கள். தமிழானாக மாறுங்கள்.

உலகம் அழகானது. உலகத்தில் உள்ள பொருட்கள் மகிழ்ச்சியைத் தரக்கூடியது. மாந்தனாகப் பிறந்தவர்கள் அனைவரும்வெற்றி வாய்ப்பானவர்கள்.

வாழ்க வளமுடன் பல்லாண்டு வாழ்க

அன்புடன்

மு.க. தமிழேந்தி
கருத்து பகிர்ந்திட
தொலைபேசி எண்: 647-297-7120 ,
மின்னஞ்சல் முகவரி: M.K.Tamilanthi@gmail.com

# துடித்தெழு தமிழா! எழுச்சி கீதம்

பல்லவி:

எழுஎழு தமிழா விடுவிடு பகைமை
எழுச்சிகொள் வேளையடா

அனுபல்லவி

உடுதுணி உணவு இன்றியே-எமதினம்
உருளுது ஈழத்திலே

சரணம்

தீயெனக் கக்குறான் தீயவன் எதிரி
தெருவெங்கும் பிணங்களடா
தண்ணியு மின்றியே தமிழன் தவிக்கிறான்
தமிழனே எழுந்திடடா

உலகத் தமிழருள் ஒப்பிட்டுப் பாரடா
எதிரியின் சனத் தொகையை
இருந்துமே ஒழிக்கிறான் எமதினம் அடக்கிறான்
எதிரியின் ஒற்றுமை பார்!

இருப்பதைக் கொடுத்து விருப்புடன்
இணைந்தால் உருப்படும் தேசமடா
வீறுகொண்டெழுந்து வினைத்திறன் பெருக்கிடு
வெற்றிநம் பக்கமடா!

- அருட்கவி ஞானகணேசன்



# உலக கோடீஸ்வரர்கள்
# World Billionaire

வருடாவருடம் போப்ஸ் (Forbes) சஞ்சிகை உலகளாவிய கோடீஸ்வரர்களை பட்டியலிட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக 2008 ஆம் ஆண்டில் உலக கோடீஸ்வரர்களினது பெயர்கள், பெறுமதி, நிலை, வயது, நாடு.... வெளிவந்துள்ளன. 2007ஆம் ஆண்டில் உலகில் இருந்த கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை 1125 ஆகும். இதுவரை இல்லாதவாறு 2008ஆம் ஆண்டு இவர்களின் எண்ணிக்கை 332 இனால் குறைந்து 793 ஆகக் காணப்படுகின்றது. 13 வருடங்கள் தொடர்ந்து முதலாவது இடத்தில் இருந்து வந்த மைக்கிரோ சொவ்ற் (Microsoft) நிறுவனர் பில் கேற்ஸ் (Bill Gates), கடந்த வருடம் (2007ஆம் ஆண்டு) இரண்டாம் இடத்திற்கு தள்ளப்பட்டபோது வோறன் ஃபவற் (Warren Buffett) முதல் இடத்தில் இருந்தார்.

இவ்வருடம் (2008) பில் கேற்ஸ் மீண்டும் முதலிடத்திற்கு வந்துள்ளார். இருந்தபோதிலும் அவருடைய மொத்த பெறுமதி 2007ஆம் ஆண்டு பெறுமதியை விட 18 பில்லியனால் குறைந்து $40 பில்லியனாகியுள்ளது. மொத்தபெறுமதியில் இறக்கம் ஏற்பட்டுள்ளது. இம்முறை முதல் 10 கோடீஸ்வரர்களிற்குள் இரண்டு இந்தியர் இருந்தனர். கடந்த வருடம் (2007) இல் 6ஆம் 8ஆம் இடங்களில் இருந்த அனில் அம்பானி, மற்றும் KP சிங் இருவரும் முதல் பத்திற்கு வெளியே போய்விட்டார்கள். 2007 இல் இந்தியாவில் 53 பில்லியனர் ஆக இருந்தது 2008 இல் 24 ஆகக்குறைந்துள்ளது.

இம்முறை Forbes இன் கோடீஸ்வரர்களின் பட்டியலில் 20 கனேடியர்கள் சேர்ந்துள்ளனர். முதலாவது இடத்தில் David Thomson குடும்பம் வந்துள்ளது. இவர்களின் பெறுமதி 13 பில்லியன் ஆகும். உலக பணக்காரர்களின் பட்டியலில் இவர்கள் 24 இடத்தில் உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



இவ்வருடம் உள்ள முதல் 10 உலக பணக்காரர்கள்

| நிலை | பெயர் | வயது | பெறுமதி | நாடு |
|---|---|---|---|---|
| 1. | பில் கேற்ஸ் | 53 | 40 பில்லியன் | அமெரிக்கா |
| 2. | வோறன் ஃபவற் | 78 | 37 " | அமெரிக்கா |
| 3. | காலோஸ் சிலம் | 69 | 35 " | மெக்ஸிக்கோ |
| 4. | லோறன்ஸ் எலிசன் | 64 | | அமெரிக்கா |
| 5. | இன்ஹ காம்பிறட் | 82 | | சுவீடன் |
| 6. | கார்ல் அல்பிரட் | 88 | | ஜேர்மனி |
| 7. | முகேஷ் அம்பானி | 51 | | இந்தியா |
| 8. | லக்ஷ்மி மிற்றல் | 58 | | இந்தியா |
| 9. | தியோ அல்பிரட் | 86 | | ஜேர்மனி |
| 10. | அமான்சியோ ஒரேகா | 73 | | ஸ்பெயின் |

# பாரம்பரிய தெருக்கூத்து

22ஆம் பக்கத்தொடர்ச்சி

நாட்டுக்கூத்திற்குரிய பிரதம விருந்தினராக சென்றபோது எம்மையும் அழைத்துச் சென்றார். எமக்கு ஹிந்தி புரியாவிட்டாலும் பாரம்பரிய உடையின்றி அம்மாணவ மாணவிகள் ஆடிய கூத்தின் விபரங்கள் நன்கு புரிந்தன. ஒரேயொரு தமிழராகிய என்னுடம் ஹிந்தி மாணவிகள் அளவளாவும் போது, ஏ. ஆர். ரகுமானின் சினிமாப் பாடல்களை நான் தமிழில் பாட அவர்கள் அதை அவர்கள் ஹிந்தியில் பாட கனேடியர்கள் வியப்புற்று இசைக்கு எல்லை இல்லை என்பதை உணர்ந்துகொண்டனர். ஜாதி, மத, மொழி முதலியன வேறுபட்டிருந்தாலும் கலைவடிவங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய வற்றை செவ்வனே செய்து முடிக்கின்றன என்பது உண்மைதான். எமது பாரம்பரிய கூத்துக்கலை வடிவத்தை கனேடிய பெரும்பான்மையின மக்களும் கண்டுகளிக்க இவை தமிழ் தொலைக்காட்சிகள் மட்டுமல்ல பிறமொழி தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பும் வகையில் ஆவன செய்யவேண்டும்.

கலைவடிவங்களில் ஈடுபாடு கொண்ட இளைப்பாறிய யாழ். அரச அதிபர் தேவநேசன் நேசையா தந்துதவிய கூத்து இறுவட்டுக்களில் பேராசிரியர் மௌனகுருவின் இராவணேசன், தெருக்கூத்து பயிற்சிப் பட்டறை இரண்டையும் பார்த்துப் பரவசமடைந்தேன். இராவணேசனில் கூத்து ஜதி பிசகாமல் நன்கு ஆடிய மாணவ மாணவிகளின் ஆடை அலங்காரங்கள் நவீன மயமாக்கப்பட்டிருந்தது சிலருக்குப் பிடித்திருக்க லாம். ஆனால் ஆனால் பாரம்பரியப் பிரியையான எனக்கு சரியாகப் படவில்லை. பாரம்பரிய சிங்களக் கூத்துக்கும் பாரம்பரிய தமிழ் கூத்துக்கு இடையில் உள்ள ஒற்றுமை வேற்றுமையை எடுத்துக்காட்டியது கூத்துப்பயிற்சிப்பட்டறையின் இறுவட்டு.

வட்டக்களரி வடிவில் ஆடிவந்த தெருக்கூத்தை சிங்களப் பேராசிரியர் சரத் சந்திர, பேராசிரியர் வித்தியானந்தன் படச்சட்ட (Picture Frame) முறையில் புனரமைத்தனர். படச்சட்ட முறை என்பது அண்ணாவியும் வாத்தியக்கலைஞர்களும் ஒரு பக்கத்தில் இருந்து பின்பாட்டு இசைக்க கூத்துக்கலைஞர்கள் சபையோர் முன்னிலையில் கலையை நிகழ்துவது. இம்முறையை தொடர்ந்தும் பேராசிரியர் மௌனகுருவின் கலைவெறி செவ்வனே போஷிப்பதையும் அவரின் ஆர்வம் அவரது மாணவமாணவிகளுக்கும் தொற்றிக் கொள்வதையும் அவதானிக்கும் போது புளகாங்கிதத்தால் புல்லரிக்கின்றது. சிங்கபாகு எனும் சிங்களக் கூத்திற்கும், வடமோடி, தென்மோடி கூத்துகளிற்குமிடையிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அருமையாக தமது கூத்துப் பயிற்சிப் பட்டறையில் விளக்கிய பேராசிரியர் மௌனகுருவிற்கு ஒரு சபாஷ். இத்தனை ஈடுபாடு கொண்ட ஆசிரியர்கள் வாழும் போது பாரம்பரிய தமிழக் கலைவடிவங்கள் நிச்சயம் வாழத்தான் போகின்றன.


MORTGAGE CONSULTANT
•Experienced • Reliable • Trustworthy
For your Mortgage and Secured Line of Credit
Pl. Call: Raymond Liu
(Manager, Residential Mortgages)
Tel.: 416.618.2132 Cell: 416.614.5446
raymond.liu@td.com www.tdcanadatrust.com/msf/raymondliu

வீடு, வியாபார நிலையங்கள் வாங்க - விற்க
எந்தவித அடமானக் கடன்களும் பெற
Direct - 416.575.5055
Anton Jeeva, P.Eng.
Real Estate Broker
Principal Mortgage
RE/MAX

CONDO.FOR SALE $199,900
McCowan & HWY 401
• Mccowan/Hwy 401 • 2 Bedrooms • 2 Washrooms • Elfs, Fridge, Stove, Newer Dishwasher, Built-In Microwave, Washer, Dryer, Window Coverings (Exclude Mbr Drapes), Broadloom W/ Laid .

Condo. for sale $228,000
• 88 Corporate Dr . #914
• 401 / Mccowan
• 2 + 1 Bedrooms
• 2 Washrooms
• Fridge, Stove, B/I D/W, Washer, Dryer, Microwave, California Shutters

Condo. for sale $175,000
• 2466 Eglinton Ave 1210
• Midland & Eglinton
• 2 + 1 Bedrooms
• 2 Full Washrooms
• Existing Elf's, Stove, New Fridge, New Dishwasher, Washer & Dryer.

HOUSE FOR SALE $319,900
• 23 Stather Cres
• Mccowan & Denison
• 2 - Storey Brick house
• 3 +1 Bedrooms
• 3 Washrooms
• 2 kitchen
• 3 Parking
• Centreal Vacuum
• Basement - Sep. entrance

HOUSE For Sale $334,888
151 Clarion Cres.
• McCowan & Highglen
• Bedrooms: 3
• Washroom: 3
• Fridge, Stove, Washer, Dryer, All Elf, All window coverings • Centreal vacuum

Condo. for sale $249,900
•83 Mondeo Dr. #112
• Birchmount & Ellesmere
• 2+1 Bedrooms • 2 Washroom
• Fridge ,Stove ,Washer,dryer

HOUSE For Sale $339,900
• 29 Sawdon Dr. Burns/Thickson,
• Whitby • Bedrooms: 4 + 2
• Washrooms: 4 • 2 parking
• Finished BSMT • Fridge, Stove, Washer, Dryer, All Window Coverings

Condo. FOR SALE $229,000
• Ellesmere & Birchmount
•2 Bedrooms •2 Washrooms
Storage Unit! Appliances Incl - Billiards Room, Indoor Swimming Pool, Party Room, Basketball Court, Movie Room, Party Lounge, Bbq Terrace, Gym, Sauna, Guest Suites, Security Guard, & More

HOUSE For Sale $339,000
• 154 Fitzgibbon Ave.
• Midland / Lawrence
• Bedrooms: 3 + 3
• Washrooms: 3 • 3 Stoves
3 Fridges , Washer , Dryer..

CDN Financial & Mortgages Inc.
Authorize Brokerage by FSCO
REMAX VISION REALTY INC.
Speciallized in Power of Sale Homes

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
☑ Virus Removal
☑ Internet Sharing
☑ Computer Tune Up
☑ Computer Repair
அனைத்து கணணி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES

NORTH AMERICAN INSTITUTE OF PHARMACEUTICAL TECHNOLOGY
Intensive and aggressive coaching for MCAT, DAT & PCAT
• MCAT (Medical College Admission Test Preparation
• PCAT (Pharmacy College Admission Test Preparation)
• DAT (Dental Admission Test Preparation)
• Advance Coaching in Chemistry, Biology & Physics Courses
NAIPT
416-457-1979 / 416-412-7374

ELECTRICAL WORKS
FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும்.
நியாயமான கட்டணம். தரமான சேவை.
வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.
தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880